Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 15 சுபகிருது வருடம், ஆனி மாதம் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (12.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 12, 0115886187 - பக்கங்கள் 12 விலை ரூ.50


## ஹிட்லர்வாத ஆட்களே வீட்டுக்கு தீவைத்தனர்

### ரணில் நேற்று குற்றச்சாட்டு

(யோ.தர்மராஜ்)

என்னுடைய ஒரே ஒரு வீடும் அதிலிருந்து என்னுடைய சொத்தான நூலகமும் தீக்கிரியாக்கப்பட்டுள்ளது. ஹிட்லர்வாத மக்கள் மாத்திரமே இவ்வாறு வீடுகளை தீ வைப்பார்கள் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டில் கடந்த 9ஆம் திகதி...

02 பக்கம்

## கோட்டா நாட்டிலிருந்து வெளியேறிவிட்டாரா?

### சபாநாயகர் முன்னுக்குப்பின் அறிவிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எனினும் அவர், நாளை புதன்கிழமைக்குள் நாடு திரும்புவார் என்றும் சபாநாயகர் பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

02 பக்கம்



# ரவூப் மீது ரணில் சீற்றம்!



### நேற்று கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் கடும் வாய்த்தர்க்கம்

### தனது வீடெரிப்புக்கு ஹக்கீமின் ட்விட்டரே காரணமென சாடல்

(நமது அரசியல் செய்தியாளர்)

எனது வீடு தீக்கிரையாகிய மைக்கு நீங்கள் பதிவிட்ட ட்டுவிட்டே காரணம். இதற்கான பொறுப்பை நீங்கள் தான் ஏற்கவேண்டும்.

இவ்வாறு நேற்று சபாநாயகர் தலைமையில் நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமை கடுமையாகச் சாடினார் பிரதமர் ரணில் விக்ரமசிங்க.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில்...

02 பக்கம்



இது எரிபொருள் வரிசையல்ல.. ஜனாதிபதி மாளிகையை பார்வையிட நீண்டநேரம் காத்துநிற்கும் மக்கள் கூட்டம்... (படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன)

## புஸல்லாவை –பெரட்டாசி பஸ் விபத்து

### இருவர் உயிரிழப்பு



06 பக்கம்

## நாட்டில் சர்வகட்சி அரசு அமையும்வரை ரணில் ஆட்சியை முன்னெடுக்க வேண்டும்

### அமைச்சர்கள் கூட்டாக வலியுறுத்தல்

(யோ.தர்மராஜ்)

நாட்டில் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்று அமையும்வரை நீங்கள், நாட்டின் பொறுப்புகளை பொறுப்பேற்றுக்கொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டுச் செல்லுங்கள் என அனைத்து அமைச்சர்களும் ரணில் விக்ரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் 'தமிழன்' செய்திகளிடம் நேற்றிரவு தெரிவித்தன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என 9ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தினால் நாளை ஜனாதிபதி பதவி விலகவுள்ளதாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாத்திரமல்லாது, பிரதமரும் பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சிகள் அழுத்தம் கொடுப்பதால், சர்வ கட்சி அரசாங்கம் ஒன்று அமைந்தால் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு, தானும் பதவி விலகுவதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## நாடாளுமன்றம் 15ஆம் திகதி கூடும்; ஜனாதிபதி தெரிவும் அதே வாரத்தில்!



(யோ.தர்மராஜ்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை பதவிலியிருந்து விலகினால் அடுத்த ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிப்பதற்காக எதிர்வரும் 15ஆம் திகதி நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் எதிர்கால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நேற்றுக் காலை கட்சித் தலைவர்களின் விசேட கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று பிற்பகல் இந்த விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவி விலகுமாறு கடந்த 9ஆம் திகதி முழு நாட்டு மக்களும் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதால் நாளை 13ஆம் திகதி ஜனாதிபதி...

02 பக்கம்

## ஆட்சியை ஒப்படைத்தால் பொறுப்பேற்கத் தயார்

### அநுரகுமார அறிவிப்பு



நாட்டின் நெருக்கடியான இந்த நேரத்தில் அரசாங்கத்தை ஒப்படைத்தால் பொறுப்பேற்கத்தயார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான...

02 பக்கம்

## நாட்டை கட்டியெழுப்பத் தயார் என்கிறார் சஜித்



ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசினால் அழிக்கப்பட்ட தேசத்தை கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் தயாரென எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## பதில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட சஜித் தீர்மானம்

(யோ.தர்மராஜ்)

ஜனாதிபதி பதவி விலகியதன் பின்னர் நாடாளுமன்றத்தின் ஊடாக தெரிவுசெய்யப்படும் பதில் ஜனாதிபதி பதவிக்கு எதிர்க்கட்சித் தலைவர்...



02 பக்கம்

## ஜனாதிபதியின் செய்திகளை சபாநாயகரே வெளியிடுவார்

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

02 பக்கம்

## சமையல் எரிவாயுத் தேவை இம்மாதம் முற்றாக பூர்த்தி

### லிட்ரோ நிறுவனத் தலைவர் தெரிவிப்பு



(யோ.தர்மராஜ்)

நாட்டில் ஜூலை மாதத்துக்கு தேவையான 33 ஆயிரம் மெற்றிக் டொன் எரிவாயு தொகை உறுதிசெய்யப்பட்டுள்ளதால் ஜூலை 31ஆம் திகதி வரும்போது நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு நூற்றுக்கு நூறு வீதம் நிவர்த்தி...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..

பதில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடவும் வரிசையொன்று வரும்போல...



## அறிவித்தபடியே பதவி விலகுவதாக பிரதமருக்கு தெரிவித்தார் கோட்டா

ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவது தொடர்பில், ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய செயற்படவுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் கடந்த சனிக்கிழமை நாட்டில் ஏற்பட்ட நிலைமையை அடுத்து கட்சித் தலைவர்கள், சபாநாயகரை சந்தித்தபோது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் உடனடியாக பதவி விலக வேண்டும் என அறிவித்திருந்தனர்.

அதனையடுத்து நாளை 13ஆம் திகதி பதவி விலகுவதாக ஜனாதிபதி கோட்டாபய அறிவித்திருந்தார்.

### உஷ்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவி இராஜினாமா கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பியுள்ளதாக தகவல்.

அதற்கு முன்னர் படைத்தரப்பின் உயர் அதிகாரிகளுடன் அவர் இணையவழி கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

அதில் சில கோரிக்கைகளை அவர் முன்வைத்தபோதும் படைத்தரப்பினர் அதனை ஏற்கவில்லையென தெரிகிறது.

இராஜினாமாவின் பின்னர் இலங்கையிலிருந்து மாலைதீவு ஊடாக டுபாய் சென்று, அங்கு சிலகாலம் தங்கவுள்ளாராம் கோட்டாபய.




# மட்டக்களப்பு நகரில் 19 துவிச்சக்கரவண்டிகளை திருடியவருக்கு 25ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பு நகரில் 19 சைக்கிள்களை திருடிய சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று (11) உததரவிட்டார்.

மட்டு. அரசடி பகுதியில் உள்ள தனியார் கம்பனி ஒன்றிற்கு முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளை ஒருவர் திருடும்போது அந்த தனியார் கம்பனி பணியாட்கள் குறித்த திருடனை மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலைய பெறுப்பதிகாரி பி.கே.ஹொட்டியாராச்சியின் வழிகாட்டலில் சிறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் எம்.ஜீ.பி.எம்.எம்.யேசூலி தலைமையிலான பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தினமும் காத்தான்குடியில் இருந்து பஸ்ஸில் பிரயாணித்து மட்டு. நகருக்கு வந்து அங்கு வங்கிகள் தனியர் கம்பனிகள், சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சைக்கிள்களை திருடிக்கொண்டு சென்று அதனை காத்தான்குடி பிரதேசத்தில் 17 ஆயிரம் ரூபா தொடக்கம் 25 ஆயிரம் வரைவில் விற்பனை செய்துள்ளதாகவும் சில துவிச்சக்கரவண்டிகளை கழற்றி பாகங்களாக விற்பனை செய்துள்ளதாகவும் போதைவஸ்துக்கு அடிமையான நிலையில் அதற்கு பணத் தேவைக்காக துவிச்சக்கரவண்டிகளை திருடி விற்பனை செய்துள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட 19 சைக்கிள்களை மீட்டுள்ளதுடன், அதில் 15 சைக்கிள்களை திருட்டு கொடுத்தவர்கள் அடையாளம் காட்டியுள்ள நிலையில், கைதுசெய்யப்பட்டவரை நேற்று (11) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.



ஜனாதிபதியின் வாசஸ்தலம் அருகே நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை நடத்தவும் ,நாட்டில் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தும் நேற்று (11) தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.. (படம் – ஏஷான் தசநாயக்க)

# இடைக்கால அரசின் ஜனாதிபதியாக சாலிய பீரிஸை நியமிக்க கோரிக்கை

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸை தேசிய பட்டியலில் நாடாளுமன்றத்திற்கு நியமித்து, இடைக் கால அரசாங்கத்தின் ஜனாதிபதியாக நியமிக்க வேண்டும் என்ற யோசனை முன்வைக் கப்பட்டுள்ளது.

முன்னாள் மாகாண ஆளுநர்களான மைத்ரி குணரட்ன, கீர்த்தி தென்னகோன் மற்றும் அசாத் சாலி ஆகியோர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இந்த யோசனையை முன்வைத்துள்ளனர்.

அனைத்து தரப்பினரும் இணங்கக்கூடிய மற்றும் சுயாதீனமாக செயற்படக்கூடிய சாலிய பீரிஸை இடைக்கால அரசாங்கத்தின் ஜனாதிபதியாக நியமிப்பது பொறுத்தமானது என நாட்டின் அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புகளும், பொதுமக்களும் பரிந்து ரைக்கின்றனர்.

அதேபோல் அரச அடக்குமுறை உக்கிரமடைந்து, நாடு ஆபத்தான நிலை மைக்குள் செல்லவிருந்த சந்தர்ப்பத்தில், அதனைத் தடுக்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சட்டத்தரணிகள் பாரிய பங்களிப்புகளை செய்தனர்.

மக்கள் போராட்டத்தின் பாதுகாவலர்களாகவும் அனுரசணையாளர்களாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் செயற்பட்டது.

இதனால், ஜனாதிபதியாக சாலிய பீரிஸை நியமிப்பது, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை பெறக்கூடிய நபர், கட்சியை சேர்ந்த ஒருவரை பிரதமராக தெரிவு செய்ய முடியும்.

அப்போது உண்மையான சர்வக்கட்சி அரசாங்கத்தை உருவாக்கி, போராட்டக்காரர்கள் இணங்கக்கூடிய பொது இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் முன்னாள் ஆளுநர்கள் தமது கடிதத்தில் கூறியுள்ளனர்.

## கோட்டா...

புதிய ஜனாதிபதியாக சபாநாயகர் வருவதற்கு அரசியலமைப்பில் இடமிருக்கிறது. ஆனால் அது முறையாக செய்யப்பட வேண்டும். சர்வகட்சி அரசொன்றை அமைப்பதற்கு பேச்சுகள் நடந்துவருகின்றன. கொரோனா தடுப்பூசிகளை வழங்க பெருமளவில் பணத்தை செலுத்தவேண்டி ஏற்பட்டதால் , நாடு பொருளாதார பின்னடைவை சந்திக்க வேண்டியேற்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்றிரவு இந்திய ஊடகத்திடம் கருத்து தெரிவித்துள்ள சபாநாயகர், ஜனாதிபதி இன்னமும் நாட்டில் இருப்பதாகக் கூறியுள்ளார். பி.பி.சியிடம் தெரிவித்ததில் சிறு தவறு ஏற்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பதில் ஜனாதிபதி...

சஜித் பிரேமதாசவை ஐக்கிய மக்கள் சக்தி தெரிவுசெய்துள்ளது.

ஜனாதிபதி நாளை பதவி விலகியதன் பின்னர் 15ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்பட்டு 19 ஆம் திகதி ஜனாதிபதி பதவிக்கான வேட்புமனு தாக்கலின்போது, சஜித் பிரேமதாசவின் பெயரை முன்வைப்பதற்கு அக்கட்சி தீர்மானித்துள் ளது.

அதன்படி, பதில் ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு 20ஆம் திகதி நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பதில் ஜனாதிபதி பதவிக்கு சஜித பிரேமதாசவை நியமிப்பதற்கு அக் கட்சிக்குள் கடும் எதிர்ப்புகளும் எழுந்துள்ளன. குறிப்பாக, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவது குறித்து ஆராய்ந்துவருவதோடு, சம்பிக்க ரணவக்கவும் பதில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட தீர்மானித்துள்ளாகவும் கூறப்படுகின்றன.

எனவே, சஜித் பிரேமதாச போட்டியிடுவதற்கு அக்கட்சிக்குள் பெரும் முரண்பாடுகள் ஏற்பட் டுள்ளதால் வேட்புமனு தாக்கலன்று கட்சிக்குள் பிளவுகளும் ஏற்படலாம் எனக் கூறப்படுகின்றன.

## நாட்டை கட்டியெழுப்ப...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டை ஸ்திரப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு நாம் பங்களிக்கின்றோம். ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசை நியமிப்பதற்கும் நாம் தயார்.

இந்த செயற்பாட்டுக்கு எதிராக யாராவது நாடாளுமன்றத்தில் சதிகளை மேற்கொண்டால் அது தேசத்துரோக செயலாகும். நாட்டை கட்டியெழுப்பும் பணியில் எமக்கு ஒத்துழைக்குமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆட்சியை ஒப்படைத்தால்...

அநுரகுமார திஸாநாயக்க நேற்று தெரிவித்தார்.

அநுரகுமார மேலும் தெரிவிக்கையில், ‘நாங்கள் பொறுப்பை ஏற்கத் தயாராக உள்ளவர்கள், பயந்து எதையும் விட்டுவிடாதவர்கள்’ என்றும் குறிப்பிட்டார்.

ஆனால், நாடாளுமன்றத்தில் மூன்று பிரதிநிதிகள் மட்டுமே இருப்பதால், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தொடர்பான வாக்கெடுப்பு நடந்தால், வேறு யாராவது ஜனாதிபதி மற்றும் பிரதமராக வர வாய்ப்புள்ளது.

மக்களது விருப்பத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையில் முரண்பாடு உருவாக்கப்பட்டுள்ளதால், மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கும் நாடாளுமன்றம் உருவாக்கப்பட வேண்டும் எனவும் திஸாநாயக்க தெரிவித்தார்.

## நாடாளுமன்றம்...

பதவியிலிருந்து விலகுவதாக, கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

அதன்படி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 13ஆம் திகதி ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதன் பின்னர், புதிய ஜனாதிபதியை நியமிப்பது மற்றும் புதிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் நேற்று கட்சித் தலைவர்களின் விசேட கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதன்படி, ஜனாதிபதி நாளை பதவி விலகினால் 15ஆம் திகதி நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கும் 19ஆம் திகதி ஜனாதிபதி பதவிக்காக வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கும் 20ஆம் திகதி இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதற்கும் கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ரவூப் மீது...

கட்சித்தலைவர்கள் கூட்டம் நேற்று நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது. இந்த கூட்டத்தின்போது சர்வகட்சி அரசாங்கமொன்றை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொள்வதற்கு கட்சித் தலைவர்கள் இணக்கம் கண்டனர். இந்த கூட்டத்தில் பங்குபற்றிய பிரதமர் ரணில் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே ஹக்கீமை கடுமையாக திட்டித்தீர்த்துள்ளார்.

“சனிக்கிழமை நடந்த கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் பதவி விலகமாட்டேன் என நான் ஒரு போதும் கூறவில்லை. புதிய ஆட்சி அமையும் போது பதவியிலிருந்து செல்வேன் என்று கூறினேன். ஆனால், நான் பதவியிலிருந்து செல்லமாட்டேன் என்று நீங்கள் இட்ட பதிவால் எனது வீடு தீக்கிரையாகும் நிலை ஏற்பட்டது. அதற்கு நீங்கள்தான் காரணம்” என்று ஹக்கீமை நோக்கி ரணில் கடுந்தொனியில் திட்டியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள ஹக்கீம், தனது முதலாவது ட்வீட்டில் அப்படியொரு அர்த்தம் வந்ததால் தவறை திருத்தி, இரண்டாவது ட்வீட்டை பதிவிட்டதாக தெரிவித்துள்ளார்.

ஆனால் ஹக்கீமின் விளக்கத்தை ரணில் ஏற்கவில்லை . நீங்கள் திருத்தம் செய்தாலும் தனியார் ஊடகமொன்று உங்களின் முதல் செய்தியை பரப்பியது. உங்களின் திருத்தத்தை அவர்கள் கண்டுகொள்ளவில்லை. நான் பதவிவிலக மாட்டேன் என்று நீங்கள் கூறிய பொய்யால் ஆத்திரமுற்றோர் எனது வீட்டை தீக்கிரையாக்கினர். இது நாகரீகமற்ற செயற்பாடு. இப்படி செய்யக்கூடாது. என்றும் இங்கு ஆவேசமாக குறிப்பிட்டுள்ளார் ரணில். இதனையடுத்து ரணிலுக்கும் ஹக்கீமுக்குமிடையில் சில நிமிடங்கள் வாய்த்தர்க்கம் இடம்பெற்றதாக அறியமுடிந்தது. இதேவேளை சுமந்திரன் எம்.பியின் டவீட்டர் பதிவு தொடர்பிலும் இக்கூட்டத்தில் ரணில் கடும் அதிருப்தி வெளியிட்டதாக அறிய முடிந்தது.

## ஜனாதிபதியின்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செய்திகளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மாத்திரமே வெளியிடுவார் என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அறிவித்தபடி பதவி விலகுவதாக ஜனாதிபதி பிரதமருக்கு அறிவித்ததாக பிரதமர் அலுவலகம் நேற்றுக்காலை அறிவித்திருந்த நிலையில், ஜனாதிபதி அலுவலகத்தின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## ஹிட்லர்வாத ஆட்களே...

இடம்பெற்ற போராட்டத்திற்கு மத்தியில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது குறித்து நேற்று விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டே இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமையினாலும் பொருளாதாரத்தை முன்னோக்கிக்கொண்டுச் செல்ல முடியாத சந்தர்ப்பத்திலேயே நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டேன். மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்தனர், வேலையின்மை ஏற்பட்டது, வாழ்க்கைச் செலவு அதிகரித்தன, எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டது மற்றும் அந்திய செலாவணி பற்றாக்குறை ஏற்பட்டது. இவ்வாறானதொரு துன்பத்தை நான் இதற்கு முன்னர் கண்டதில்லை. இதனாலேயே நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டேன்.

இதனைத் தொடர்ந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தேன். இதனை ஓரிரு நாட்களில் செய்து முடிக்க முடியாது. ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு சுமார் ஒரு வருடமாவது செல்லும். ஆனால், சுமார் நான்கு வருடங்கள் செல்லும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இதில் முதல் வருடமே மிக கடினமான காலமாகும்.

நானும் கடினமான காலத்திலேயே பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டேன். இதற்கிடையில் எரிபொருள் வரிசைகள் அதிகரித்தன. தற்போது அதிக நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. அவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அடுத்த சில மாதங்களில் இது அதிகரிக்கும். மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை நான் அறிவேன். அதற்காக, மக்களிடம் மன்னிப்பும் கோரியுள்ளேன். ஆனால், நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்தே இவற்றிலிருந்து மீளவேண்டும்.

இந்த நிலையில், கடந்த 9ஆம் திகதி போராட்டம் நடந்த வேலை என்னுடைய அனைத்து சந்திப்புகளையும் ஒத்திவைத்துவிட்டு, நான் அன்று பகல் என்னுடைய வீட்டில் இருந்தேன். ஆனால், போராட்டத்திற்கு வந்து கலந்துகொண்டு என்னுடைய வீட்டின் வழியாகச் செல்வோர் கூச்சலிடக் கூடும் எனவே, நீங்கள் வீட்டிலிருந்து வெளியேறுங்கள் எனப் பொலிஸார் என்னிடம் கூறினர். அதற்கமைய, நானும் என்னுடைய மனைவியும் வீட்டை விட்டு வெளியேறினோம். அப்போதே என்னுடைய வீடு தீ வைக்கப்பட்டது.

எனக்கிருந்த ஒரே ஒரு வீடும் இன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. என்னுடைய நூலகமே என்னுடைய பாரிய சொத்தாக இருந்தது. அதில் 2 ஆயிரத்து 500 புத்தகங்கள் இருந்தன. அவற்றில் போர்த்துக்கேயர் காலத்தில் எழுதிய, 300, 400 வருடங்களுக்கு முன்னர் ஒல்லாந்தர் காலம் தொடர்பாக எழுதிய புத்தகங்கள், மற்றும் சில முக்கியஸ்தர்கள் கையொப்பமிட்டு கொடுக்கும் புத்தகங்கள் என அதிக பெறுமதியான புத்தகங்கள் இருந்தன.

இவற்றை நான் தொடர்ந்து வைத்திருக்க முடியாது. எனவே, எங்களுக்கு பின்னர் இந்த புத்தகங்களை ரோயல் கல்லூரிக்கும் போர்த்துகேயர் மற்றும் ஒல்லாந்தர் கால புத்தகங்களை பேராதனை பல்கலைக் கழகத்திற்கும் ஏனைய சில நிறுவனங்களுக்கும் வழங்குவதற்காக வேறுபடுத்தி வைத்திருந்தோம். அத்தோடு, 200 வருடங்களுக்கு முன்னரான பல பழைமையான, பெறுமதியான ஓவியங்கள் இருந்தன. இதில் ஒல்லாந்தர் கால ஓவியம் ஒன்று மாத்திரமே எஞ்சியுள்ளது. ஆனால், ஏனைய அனைத்தும் அழிக்கப் பட்டுள்ளன.

பெறுமதியான 15 -20 புத்தர் சிலைகள் இருந்தன. அவற்றில் ஒன்று மாத்திரமே எஞ்சியுள்ளது. பௌத்த ஓவியங்கள் என அனைத்தும் அழிந்துள்ளன. ஹிட்லர்வாத மக்கள் மாத்திரமே இவ்வாறு வீடுகளை தீ வைப்பார்கள்.

ஆனால், இதற்கு பின்னணியொன்றும் இருக்கின்றது. அன்றைய தினம் விசேட கட்சித் தலைவர் கூட்டம் ஒன்று இருந்தது. அது சூம் தொழில்நுட்பத்தில் இடம்பெற்றது. இதன்போது, ஜனாதிபதி பதவி விலக வேண்டும். புதிய அரசாங்கம் அமையவேண்டும் என அனைத்து கட்சித் தலைவர்களும் கூறினர். ஆனால், ஜனாதிபதி மற்றும் பிரதமர் என இருவரும் பதவி விலகி, சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி யோசனை முன்வைத்தது.

ஆனால், இதற்கு காலம் செல்லும் எனவே, இதற்கு நான் இணக்கம் தெரிவிக்க முடியாது. ஜனாதிபதி பதவி விலகிய பின்னர் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்று அமைத்த பின்னர், நான் என்னுடைய பிரதமர் பதவியை இராஜிநாமா செய்வதாக கூறினேன். இது குறித்து விவாதங்கள எடுக்கப்பட்டன. எனினும், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை, எரிபொருள் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதால் நான் என்னுடைய நிலைப் பாட்டில் மாற்றமில்லை என்றேன்.

அதற்கு முன்னர் இந்த யோசனைக்கு நான் எதிர்ப்பு தெரிவித்ததாக ரவூப் ஹக்கீம் டுவிட்டரில் தெரிவித்துள்ளார். இது சிரச தொலைக்காட்சிக்கு சென்றது. உடனே, நான் சர்வ கட்சி அரசாங்கம் அமைத்தால் அதிகாரத்தை வழங்க தயார் என அறிக்கைவிட்டேன். ஏனைய ஊடகங்கள் அதனை பிரசுரித்தாலும் சிரச தொலைக்காட்சி மாத்திரம் இதனை திரிபுபடுத்தி செய்தி வெளியிட்டது.

இதன்போது, அதன் பிரதானிக்கு அழைப்புவிடுத்து இவ்வாறு செய்ய வேண்டாம் எங்களுடைய வீடுகளுக்கு தீ வைப்பார்கள் எனக்கூறினேன். எதனையும் கேட்காது, முன்னெடுத்துச் சென்றனர். பின்னர் என் வீட்டுக்கு முன்னால் பலர் கூடியதால் பொலிஸார் கண்ணீர்ப்புகை தாக்கல் நடத்தினர். பின்னர் பொலிஸார் தாக்குதலும் நடத்தினர். இதன்போது ஊடகவியலாளர் தாக்கப்பட்டதாகக் கூறினர். அவ்வாறு நடந்திருந்தால் பொலிஸாருக்கு அறிவித்திருக்க வேண்டும். அதனை விடுத்து, இங்கு வாருங்கள், இந்த வீட்டுக்கு வந்ததாலேயே இவ்வாறு நடந்தது எனக்கூறி பாதைகளையும் காட்டினர். பின்னரே என்னுடைய வீடு தீ வைக்கப்பட்டது.

இன்று ஜனாதிபதி மாளிகை, செயலகம் மற்றும் அலரிமாளிகையை கைப்பற்றி அனைத்து கடிதங்களும் அழிக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்புக்கு அமையவே செயற்பட வேண்டும். நானும் அரசியலமைப்பை பாதுகாக்கவுள்ளேன். அதற்கமையவே, செயற்படுவோம் - என்றார்.

## நாட்டில்...

இந்த நிலையில், நாட்டில் அடுத்த ஜனாதிபதி மற்றும் அடுத்த பிரதமர் உள்ளிட்ட புதிய அரசாங்கம் குறித்த பேச்சுவார்த்தைகள் சூடுபிடித்துள்ளன. சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து எதிர்க்கட்சிகள் மற்றும் சுயாதீன கட்சிகளும் மும்முரமாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றன.

எனினும், சர்வகட்சி அரசாங்கம் மற்றும் புதிய பிரதமர் தொடர்பில் எதிர்க்கட்சிகளிடையே எவ்வித இணக்கப்பாடும் ஏற்படுத்தப் படவில்லை. இதற்கிடையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு தலைமைத்துவம் இல்லாதிருக்கும் என்பதால் தற்போதுள்ள அமைச்சர்கள் மற்றும் அரசாங்கமும் அடுத்த கட்ட செயற்பாடுகள் குறித்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில், ஜனாதிபதி பதவி விலகினால் அடுத்தகட்ட செயற்பாடுகள் என்ன என்பது குறித்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அமைச்சரவை அமைச்சர்களுக்கும் இடையில் நேற்று காலை விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து தீவிரமாக ஆராய்ந்துள்ளதோடு, சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பது குறித்த அழுத்தங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாக, சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் பேச்சுவார்த்தை மட்டத்திலேயே இருக்கின்றன. இதுவரை எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. எனவே, நாங்களும் விலகினால் நாட்டை அனைத்து செயற்பாடுகளும் முற்றாக ஸ்தம்பிதமடைந்துவிடும் என அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக, நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், நாட்டுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான பணம் செலுத்தப்பட்டுள்ளதால் 15 – 17 ஆம் திகதிக்குள் டீசல் கப்பல் ஒன்றும் 17 – 19ஆம் திகதிக்கு பெற்றோல் கப்பல் ஒன்றும் நாட்டுக்கு வருகைத் தரவுள்ளதால் தற்போதைய நிலையில் நாங்கள் அடுத்த கட்ட செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எனவே, சர்வ கட்சி அரசாங்கம் ஒன்று அமையும் வரை நீங்கள் நாட்டின் பொறுப்புகளை பொறுப்பேற்று நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்லுங்கள் என அனைத்து அமைச்சர்களும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்துள்ளதோடு, அவ்வாறு சர்வ கட்சி அரசாங்கம் அமைந்தால் நாங்கள் அனைவரும் அமைச்சு பதவிகளிலிருந்து விலகுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, சர்வ கட்சி அரசாங்கம் அமையும் வரை நாட்டின் செயற்பாடுகளை எவ்வித தடையுமின்றி முன்னோக்கிக் கொண்டுச் செல்ல வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளனர்.

## சமையல் எரிவாயுத்...

செய்யப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

அத்தோடு, எரிவாயு சிலிண்டரின் விலை 50 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 4 ஆயிரத்து 910 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக லிட்ரோ எரிவாயு விநியோகம் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு எரிவாயு கப்பல் வருகைத் தந்ததையடுத்து, நாட்டின் எரிவாயு விநியோகம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிற்கு தேவையான எரிவாயுவை ஏற்றிவந்த கப்பல் கெரவலபிட்டிய பகுதியில் நங்கூரமிடப்பட்டுள்ளது. இக்கப்பலில் 3 ஆயிரத்து 759 மெற்றிக் டொன் எரிவாயு கிடைத்துள்ளது. அதன்படி, அக்கப்பலிலுள்ள எரிவாயு தரையிறக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, அவற்றை எரிவாயு சிலிண்டர்களில் அடைத்து, இன்று (நேற்று) 12 மணிக்குள் 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரையான எரிவாயு சிலிண்டர்களை கொழும்புக்குள் மாத்திரம் விநியோகிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை, இன்று 12.5 கிலோ எடையுடைய 80 ஆயிரம் சிலிண்டர்களையும் 5 கிலோ மற்றும் 2.3 கிலோ எடையுடைய சிலிண்டர்கள் தலா 25 ஆயிரம் வீதம் மொத்தமாக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க எதிர்பார்த்துள்ளோம். அதன்படி, அதிகாலை முதல் குறித்த விநியோக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

20 ஆயிரம் மெற்றிக் டொன் எரிவாயு கப்பலொன்று தற்போது மாலைதீவு கடற்பகுதியை அண்மித்துள்ளது. இது பாரிய கப்பலாகும். அதேபோன்று, 3 ஆயிரத்து 200 மெற்றிக் டொன் கப்பலொன்றும் எதிர்வரும் 16ஆம் திகதி இரவு நாட்டை வந்தடையவுள்ளது. இதனையடுத்து, 20, 22, 24, 27, 29 மற்றும் 31 ஆம் திகதிகளில் 33 ஆயிரம் மெற்றிக் டொன் வரையான எரிவாயுக்கு விலைமனுக்கோரி உறுதி படுத்தப்பட்டுள்ளது. எனவே, ஜூலை 31 ஆம் திகதிக்குள் எரிவாயு தட்டுப்பாட்டை 100 வீதம் நிவர்த்திசெய்ய முடியும் என எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை, சிலிண்டரின் விலையை 50 ரூபாவால் மாத்திரம் அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். குறிப்பாக, குறித்த வகையுள்ள லாப் எரிவாயு தற்போது சந்தையில் 6 ஆயிரத்து 850 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால், நாங்கள் தற்போது 4 ஆயிரத்து 910 ரூபாவிற்கு கொழும்பில் விற்பனை செய்யப்படுவதோடு, ஏனைய மாவட்டங்களுக்கு போக்குவரத்து கட்டணங்களும் இணைந்து விலை அதிகரிப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன – என்றார்.

# ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளுடைய தாய்மார் வீட்டு வேலைகளுக்காக வெளிநாடு செல்வதன் தாக்கம்



## குழந்தைகளின் வளர்ச்சியில் எதிர்மறை பாதிப்பென நாடாளுமன்ற விசேட குழு தெரிவிப்பு

### ஆராய்ந்து விதப்புரைகளை அறிக்கையிடுமாறும் பணிப்பு

ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளைக் கொண்ட தாய்மார் வீட்டு வேலைகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதி வழங்குவது அந்தக் குழந்தைகளின் குழந்தைப் பருவ வளர்ச்சியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துமென ஆண் – பெண் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி'செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை நாடாளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான நாடாளுமன்ற விசேட குழு தெரிவித்துள்ளது.

வீட்டு வேலைகளுக்காக (பயிற்றப்படாத தொழில்) பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது பிரதேச செயலகங்களில் விசாரணைகள் நடத்தப்பட்டு குடும்பப் பின்னணி அறிக்கை வழங்கப்பட்டு, அதனை அடிப்படையாகக்கொண்டே வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளைக் கொண்ட பெண்கள் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்படவில்லையென்பதுடன், ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் காணப்பட்டால் அவர்களின் காப்புறுதி, பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட பல விடயங்கள் கவனத்திற்கொள்ளப் படும்.

எனினும், வீட்டு வேலைக்காக வெளிநாடு செல்லும் தாய்மார்களின் பிள்ளைகளின் குறைந்தபட்ச வயதை 02 ஆக குறைப்பதற்கும், இதுவரை அத்தியாவசியமாக இருந்த குடும்பப் பின்னணி அறிக்கை சமர்ப்பிப்பதை இனி கட்டாயமாக்காமலிருப்பதற்கும் ஜூன் 27ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

ஆண் – பெண் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதிசெய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை நாடாளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான நாடாளுமன்ற விசேட குழு மற்றும் பெண் நாடாளுமன்ற உறுப் பினர்களின் ஒன்றியம் ஆகியன அண்மையில் ஒன்றுகூடி இது தொடர்பில் நீண்டநேரம் ஆராய்ந்திருந்தன.

இதற்கமைய, ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளைக்கொண்ட இலங்கைத் தாய்மார்களை வீட்டு வேலைக்காக வெளிநாடு செல்ல அனுமதி வழங்கல் மற்றும் வெளிநாடு செல்லும் தாய்மார்களின் குடும்பப் பின்னணி அறிக்கையை சமர்ப்பிப்பதை கட்டாயமாக்காமல் இருத்தல் குறித்த அமைச்சரவைத் தீர்மானங்களை மீள் பரிசீலனை செய்யவேண்டும் எனக் குறித்த குழுவின் தலைவி நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

குழந்தைகளின் ஆரம்பப் பருவ வளர்ச்சியில் தாய் முக்கிய பங்காற்றுவதுடன், இதனால் ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் உள மற்றும் உடல் வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதால் இத்தீர்மானம் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.



தற்போதைய அரசியல் நெருக்கடி மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட பிரதிநிதிகள் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் கே.டி.லால்காந்த ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று (11) ஜே.வி.பி. தலைமையகத்தில் இடம்பெற்றது.

# எங்களின் செயற்பாடுகளில் சதி செய்தால் அது தேசத் துரோகமாகும்

## புதிய அரசாங்கத்தை அமைக்க நாங்கள் தயார் என சஜித் தெரிவிப்பு

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட மொட்டு அரசாங்கத்துக்கு நாட்டு மக்களால் வழங்கப்பட்ட ஆணை நிறைவுக்கு வந்து விட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

விசேட ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த அரசாங்கம் எமது அழகான நாட்டை அழித்துவிட்டது. இவ்வாறு அழிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் நான் தயாராகவுள்ளேன்.

நாட்டை ஸ்திரப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு பங்களிக்கவும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்தை நியமிப்பதற்கு நாங்கள் தயார் .

இச்செயற்பாட்டிற்கு எதிராக யாராவது நாடாளுமன்றத்தில் சதிகளை மேற்கொண்டால் அது தேசத்துரோக செயல். நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் தனக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# சுமந்திரன் பிரதமரானால் வரவேற்பேன்

## சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



புதியவர்கள் புதிய முகங்கள் என்பதற்காக நாங்கள் சர்வகட்சி அரசாங்கம் அமைக்க போகின்றோமென மக்கள் முன்வந்தால் அதனால் எந்த பயனும் கிடையாதென தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (11) ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும்போதே சி.வி.விக்னேஸ்வரன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள சூழலில் ஜனாதிபதி பதவி விலகினால் பிரதமரும், பிரதமர் செயலிழந்து போனால் அவருக்கு முடியாதுபோனால் ஒரு மாத காலத்திற்கு சபாநாயகர் பதவியை ஏற்று நடத்த உரித்திருக்கின்றது. ஆகவே, ஜனாதிபதிக்கு பதிலாக பிரதமரும் பிரதமருக்கு பதிலாக சபாநாயகருக்குமென அந்த மூன்று பேருக்குமே அந்த உரித்து காணப்படுகின்றது.

புதியவர்கள் புதிய முகங்கள் என்பதற்காக நாங்கள் சர்வகட்சி அரசாங்கம் அமைக்க போகின்றோம் என மக்கள் முன்வந்தால் அதனால் எந்த பயனும் கிடையாது. எதிர்க்கட்சிகள் இணைந்து அரசாங்கம் அமைப்பது என்பதை விட எங்களிடம் என்ன கொள்கைகள் என்ன மாதிரியான விடயங்களை முன்வைத்து நாம் அரசாங்கத்தை அமைக்க போகின்றோம் என்பதே முக்கியம் - என்றார்

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் பிரதமராக நியமிக்கப்படலாம் என சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள கருத்துகள் தொடர்பாக வினவியபோது,

“மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் உத்தியோகபூர்வமல்லாத வகையில் சுமந்திரனை பிரதமராக நியமிக்கலாம் என்று அணுகியநிலையில் அதை எல்லா கட்சிகளும் இணைந்து அழைத்தால்தான் அந்த பதவியை ஏற்க முடியும் என சுமந்திரனுக்கு தெரிந்த ஒருவர் என்னிடம் தெரிவித்தார். சுமந்திரனை பிரதமராக அழைத்தது உண்மையானால் நான் சந்தோஷம் அடைவேன். ஏனென்றால் அவர் என்னுடைய மாணவர். பல வருட காலமாக தெரிந்தவர் என்ற வகையில் அதற்கு நான் எதிர்ப்பு அல்ல.

இது பற்றி இணையவழிக் கலந்துரையாடலில் கூறியதன் காரணமாக இன்று அது பரகசியமாகியுள்ளது. ஆனால், சில விடயங்களை மனதில் வைத்திருக்க வேண்டும். அவர் தன்னுடைய கட்சியின் ஏகோபித்த விருப்பிலா அல்லது தன்னுடைய தனிப்பட்ட விருப்பில் ஏற்றுக் கொள்வதா என்பது ஒரு கேள்வி.

இரண்டாவது கேள்வி தமிழர்கள் அமைச்சுப் பதவியை ஏற்றதன் பிற்பாடு தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தால், தாங்கள் என்ன காரணத்துக்காக நாடாளுமன்றுக்கு கொண்டுவரப்பட்டார்கள் என்பதை மறக்க வேண்டிய நிலை ஏற்படும்.

காரணம், எந்த நேரமும் மத்திய அரசுடன் இணைந்து வேலையைச் செய்யும்போது மத்திய அரசாங்கத்தினட விருப்பு தாக்கம் செலுத்துவதால் தமிழ் மக்களுக்காக தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதை மறந்துவிடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

நான் நினைக்கின்றேன் எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஏற்றதன் பின்னர் அமிர்தலிங்கத்தின் வாழ்வில் பல முரண்பாடுகள் ஏற்பட்டன.

அதுபோலவே சம்பந்தனும். சுமந்திரன் இவ்வாறு பதவி ஏற்றுக்கொள்வதானால் தமிழ் கட்சிகள் அனைவரினதும் ஏகோபித்த விருப்பை பெற்றுக்கொண்டால் நல்லது என நினைக்கின்றேன் - என்றார்.

# மூன்று நிறுவனங்களுக்கு கோப் குழு இன்று விசாரணைக்கு அழைப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனைய நிறுவனம் மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகியவற்றின் தலைவர்கள் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு (கோப் குழு) இன்று (12) முற்பகல் 10.00 மணிக்கு அழைக்கப்பட்டிருந்தபோதும், நாட்டில் காணப்படும் அரசியல் சூழ்நிலைகள் காரணமாக குழுவைக் கூட்டாதிருக்க தீர்மானித்திருப்பதாக அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) சரித ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரினால் கடந்த கோப் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட தனிப்பட்ட கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு எரிபொருள் விலைகள் தொடர்பில் நாட்டில் பாரிய சர்ச்சை எழுந்துள்ளது. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருடைய இந்தக் கருத்து மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனம் ஆகியவை தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு விசாரணைகளை நடத்த கோப் குழு தீர்மானித்திருந்தது.

நாட்டு நிலைமை சுமுகமடைந்ததும் இந்தக் கோப் குழுக் கூட்டம் நடத்தப்படும் என அதன் தலைவர் சரித ஹேரத் தெரிவித்தார்.

# முற்பதிவு செய்தவர்களுக்கு சமையல் எரிவாயு விநியோகம்

(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பு மாநகரப் பகுதி மற்றும் அதனை அன்டிய நகர சபைகள் உட்பட்ட பகுதிகளான தெஹிவளை, கல்கிசை, இரத்மலானை பத்தரமுல்லை, மஹரகம போன்ற பகுதிகளில் சுமார் 30இற்கும் மேற்பட்ட சமையல் எரிவாயுக்காக நேற்று (11) முற்பதிவு செய்த வாடிக்கையாளருக்கு எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன.

இரத்மலானையிலுள்ள கொலன் பெற்றோல் நிலையத்தின் ஊடாக ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் நேற்று பகிர்ந்தளிக்கப்பட்டன.

12.5 கிலோ உடைய சிலிண்டர் 4,910 ருபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. கடந்த ஒன்றரை மாத காலமாக வாடிக்கையாளர்கள் எரிவாயு இல்லாது தத்தமது வெற்று சிலிண்டர்களை வைத்து டோக்கன் இலக்க முறைப்படி முகவர் நிலையத்தில் பதிந்து வைத்திருந்தனர்.

அத்துடன், நேற்று கொழும்பிலுள்ள சகல எரிவாயு நிலையங்களிலும் தலா ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன. 1000இற்கு அதிகமான வாடிக்கையாளர்கள் சிலிண்டருக்குரிய டோக்கன் இல்லாமல் திரும்பிச் சென்றனர். அடுத்த கப்பல் மூலம் சிலிண்டர்கள் வரும்வரை அவர்கள் முகவர் நிலையத்தின் அருகில் தமது வெற்று சிலிண்டர்களை வைத்துக்கொண்டு மக்கள் வரிசையில் நின்றுகொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

# ஆறாவது இலங்கை கிரிக்கெட் வீரருக்கு கொரோனா

அவுஸ்திரேலிய அணியுடன் நேற்று நிறைவுக்கு வந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பெத்தும் நிஸங்கவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில், அவர் டெஸ்ட் போட்டியிலிருந்து வெளியேறினார். இதன் மூலம் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் ஆரம்பித்த பின்னர் இலங்கை டெஸ்ட் குழாத்தில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட ஆறாவது வீரரானார்.

நேற்று முன்தினம் காலை உடல் நிலை சற்று சரியாக இல்லை என மேற்கொண்ட புகாரை அடுத்து அவருக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதோடு, இந்த பரிசோதனையின் மூலமே அவருக்கு தொற்று இருப்பது உறுதியானது. இதனால் இரண்டாவது டெஸ்ட் போட்டியிலிருந்து அவர் வெளியேற, அவரின் பிரதியீட்டு வீரராக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஓசத பெர்னாண்டோ இலங்கை அணியில் உள்வாங்கப்பட்டார்.

இவர் முதல் டெஸ்ட் போட்டியில் கொரோன வைரஸ் தொற்றுக்குள்ளான அஞ்சலோ மெத்யூஸின் பிரதியீட்டு வீரராகவும் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் வரிசையில் காத்திருந்துவிட்டு இளைப்பாறச் சென்றவர் மயங்கி விழுந்து மரணம்






(வவுனியா நிருபர்)

வவுனியாவில் எரிபொருள் வரிசையில் காத்திருந்து இளைப்பாறுவதற்காக சென்றவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று (11) மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பண்டாரவன்னியன் சதுக்கம் பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 5 தினங்களாக எரிபொருள் விநியோகிக்கப்படாத நிலையில் மோட்டர்சைக்கிளை அரச உத்தியோகத்தர்களுக்கான வரிசையில் நிறுத்தி விட்டு குடும்பஸ்தர் ஒருவர் எரிபொருளுக்காக காவல் நின்றுள்ளார்.

நேற்றும் (11) பெற்றோல் கிடைக்காமையால் நீண்டநேரம் வரிசையில் நின்றுவிட்டு இளைப்பாறுவதற்காக நகரசபை முன்பாக உள்ள கடைப் பகுதிக்கு சென்றபோது குறித்த குடும்பஸ்தர் மயங்கி விழுந்துள்ளார்.

இதனையடுத்து, அவரை அருகில் நின்ற மோட்டர்சைக்கிளில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட போதும், அவர் வைத்தியசாலைக்கு கொண்டுவருவதற்கு முன்னரே இறந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா நகரசபையில் சுகாதார ஊழியராக கடமையாற்றும் வவுனியா, கொக்குவெளி பகுதியைச் சேர்ந்த மாணிக்கம் செல்வகுமார் (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இலங்கைக்கு உதவும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்துடனான இராஜதந்திர ரீதியிலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், மக்கள் கிளர்ச்சியால் மற்றுமொரு ஆட்சிமாற்றம் நாட்டில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், கலந்துரையாடல்கள் மேலும் காலதாமதமாவதால் உதவித்திட்டங்கள் பின்னடைவை சந்திக்கலாமென நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அவ்வாறு உதவித்திட்டங்கள் தாமதமாகும் பட்சத்தில் நாட்டின் மோசமான நிலைமை உச்சக்கட்டத்தை அடையும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இலங்கையில் காணப்படும் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு கிட்டுமென எதிர்பார்ப்பதாகவும் அந்தத் தீர்வானது இலங்கைக்கான உதவித்திட்டங்கள் குறித்த கலந்துரையாடல்களை மீள ஆரம்பிப்பதற்கு சாதகமாக அமையுமென நம்புவதாகவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி கடந்த 09ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் விளைவாக நாளைய தினம் பதவியை இராஜினாமா செய்வதாக அவர் அறிவித்துள்ளார். இந்நிலையிலேயே சர்வதேச நாணய நிதியம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

“இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மீது நாம் அக்கறை கொண்டுள்ளோம். இந்தக் கடினமான நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கிணங்க ஆதரவளிப்பதற்கான உறுதிப்பாட்டை நாம் வழங்குகிறோம்” என அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும், நிதி அமைச்சு, மத்திய வங்கியின் அதிகாரிகளுடன் தொழில்நுட்ப ரீதியிலான கலந்துரையாடல்கள் தொடரும் எனவும் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் மக்கள் கிளர்ச்சி மூலம் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை ஆகியன கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜுலை 12ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# மக்கள் சக்தியை மதியுங்கள்!

விலகுவதாக அறிவித்துள்ளார். இதனடிப்படையில் நாடு எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கு நீண்டகால தீர்வைப் பெறும் முயற்சிகளில் அரசியல் தலைவர்கள் துரிதமாக ஈடுபட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் அமையவுள்ள எந்தவொரு புதிய அரசாங்கமும் நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை அடையக்கூடிய மற்றும் மக்களின் அதிருப்தியை நிவர்த்திசெய்யக்கூடிய தீர்வுகளைக் கண்டறிந்து செயற்படுத்த வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அரசியல், கட்சி பேதங்களை கடந்து தேசத்தின் முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்புடன் இந்தத் தருணத்தை அணுகுமாறு இலங்கை நாடாளுமன்றத்துக்கு அழைப்பு விடுப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் செய்தித் தொடர்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரம், உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு நீண்டகால தீர்வு அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தினதும் அமெரிக்காவினதும் நிலைப்பாட்டின் பிரகாரம் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை மிகத் துரிதமாக உருவாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிறது.

நாட்டில் கடந்த மே 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவதாக அறிவித்தார். அதன்பின்னர் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் நாடு பல சவால்களை எதிர்நோக்கியது. அந்த நேரத்திலும், அரசியல் ரீதியிலான பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டுவரப்படாத பட்சத்தில் பேச்சுவார்த்தைகள் மேலும் காலதாமதமடையும் என சர்வதேச நாணய நிதியம் எச்சரித்திருந்தது.

நாட்டில் அமைச்சரவை இல்லாத பட்சத்தில் நிதியுதவி வழங்குவதற்கான உத்தரவாதம் இல்லையெனவும் அந்நிதியம் அப்போது சுட்டிக்காட்டியிருந்தது. அதன் காரணமாக இருதரப்பு கலந்துரையாடல்கள் மேலும் தாமதமாகின.

இப்போது அவ்வாறானதொரு சூழ்நிலை மீண்டும் உருவாகியுள்ளது. நாட்டில் உடனடியாக அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்க வேண்டிய கடப்பாடு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துத் தரப்பினருக்கும் உருவாகியுள்ளது.

அரசியல் இலாபம், கொள்கை முரண்பாடு, பழைய கோபதாபங்கள், சூட்சுமமான காய்நகர்த்தல்கள் ஆகியவற்றை கைவிட்டு மக்களுக்காக தூய்மையான மனதுடன் ஒன்றிணையவேண்டியது அரசியல்வாதிகளின் கடமையாகும்.

மக்கள் பிரதிநிதிகளாக, மக்களின் நலன்கருதி பிரிவினைகளை கைவிட்டு அரசியல்தலைவர்கள் செயற்படுவார்கள் என நம்புகிறோம். அவ்வாறில்லாதபட்சத்தில் மக்கள் சக்தியால் அவர்கள் தகர்த்தெறியப்படுவார்கள் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

மக்கள் சக்தியை மதியுங்கள்!

# உடல் பருமன், நீரிழிவு நோயைத் தடுக்கும் சிறுகுடல் நுண்ணுயிரிகள்!

## புதிய கண்டுபிடிப்பு...



**பேராசிரியர் சோ. மோகனா**

நம் குடலில் வாழும் நுண்ணுயிரிகளே நம் உடல் ஆரோக்கியத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளதாக புதிய ஆய்வு ஒன்று கூறுகிறது.

கலிபோர்னியா பல்கலைக்கழகம் சான்டியாகோவிலுள்ள மருத்துவத்துறை பத்திரிகையில் அத்துறையின் பேராசிரியர் அமீர் ஜரின்பார், கடந்த ஜூலை 5இல் சிறுகுடல் நுண்ணுயிரிகள், மனிதனுக்கு செய்யும் நன்மைகள் தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளார்.

**மனித உடல் நோய் சோதனைக்கு உதவும் எலிகளின் மாதிரிகள்**

எலிகள் எவ்வளவு சாப்பிட்டன மற்றும் அவற்றின் குடல் நுண்ணுயிரியின் தன்மையை மாற்றியமைக்கும்போது அவை எப்படி நடந்துகொள்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். அதிகப்படியான உணவு, குறைந்த நுண்ணுயிரிகள் என்பது வளர்சிதை மாற்ற ஆரோக்கியத்தை விளைவித்தது. இது எலிகளை மனிதனுக்கு மாதிரிகளாக வைத்து சோதனை நடத்தும்போது தெரிய வந்த தகவலாகும்.

**நம் குடலின் குடியிருப்பாளர்கள்: பக்டீரியா & நுண்ணுயிரிகள்**

நம் ஒவ்வொருவரின் குடலிலும் 500 முதல் 1,000 பக்டீரியா இனங்கள் வாழ்கின்றன. ஆச்சரியமாக இல்லையா? அது மட்டுமா, ஒருவேளை 1,00,000 டிரில்லியன் நுண்ணுயிரிகள் கூட வாழலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் சென்டியாகோ மருத்துவப் பாடசாலையின் ஆராய்ச்சியாளர்கள் ‘செல் ரிப்போர்ட்ஸ்’ என்ற இதழில் வெளியிட்டுள்ள புதிய ஆய்வறிக்கையில், உணவு மற்றும் உணவு முறைகள் என்பவை, இந்த குடல்வாழ் நுண்ணுயிரிகளை எவ்வாறு பாதிக்கின்றன என்றும் நமது ஆரோக்கியம், குறிப்பாக, உடல் பருமன் மற்றும் வகை 2 நீரிழிவு வியாதியை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் ஆராய எலி மாதிரிகளைப் பயன்படுத்தினர்.

**எலிகள் மற்றும் மனிதர்களில் ஒரே மாதிரியான செயல்பாடு**

எலிகள் மற்றும் மனிதர்கள் இரண்டிலுமே, இலியம் (Ileum) என்னும் சிறுகுடலின் கீழ்ப்பகுதி என்பது சிறுகுடலின் இறுதி நீட்சியாகும். இது பெருங்குடலின் முதல் பகுதியான சீக்கத்துடன் (Caecum) இணைகிறது. இலியத்தில் திரவமாக்கப்பட்ட உணவிலிருந்து ஊட்டச்சத்துகள் வெளியேற்றப்படுகின்றன. பெருங்குடலின் தொடக்கத்தையும் குறிக்கும் சீக்கமில், தண்ணீரை பிரித்தெடுக்கும் செயல்முறை தொடங்குகிறது.

**நுண்ணுயிரிகளின் பணி**

மேலே குறிப்பிட்ட இரண்டு செயல் முறைகளும் சிக்கலான, ஆற்றல்மிக்க செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியமானவை. இந்த செயல்பாடுகள், நாம் உட்கொண்ட உணவு வகைகள் மற்றும் குடலில் குடியிருக்கும் நுண்ணுயிரிகளின் தன்மையினால், இதன் காரணிகளால் மிகவும் ஆழமாக பாதிக்கப்படுகின்றன. மேலும் அவைகளின் இருப்பு மற்றும் செயல்பாடுகள், நமது குடலின் செரிமானம், ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுதல், விற்றமின் உருவாக்கம் மற்றும் நோயெதிர்ப்பு மண்டலத்தின் வளர்ச்சி ஆகியவற்றை கட்டுப்படுத்த உதவுகின்றன.

**மாறிக்கொண்டிருக்கும் குடல் சூழலும் & குடியிருப்புவாசிகளும்**

“நாம் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், குடல் நுண்ணுயிரிகள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன. இதனால் நாம் குடலுக்குள் என்ன நடக்கிறது என்பதை புரிந்துகொள்ள கடினமாக இருக்கும். எனவேதான், இந்நிகழ்வுகளை ஆய்வாளர்கள் தொடர்ந்து படம் எடுத்துக்கொண்டே இருப்பதன் மூலம் அறிகின்றனர்.

‘‘குடலின் சூழல் என்பது நாம் சாப்பிடும் உணவின் தன்மையை அடிப்படையாகக் கொண்டது என்பது மட்டுமின்றி, ஒரு நாளின் நேரத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்பதை, நாம் உணர வேண்டியது அவசியம்” என்கிறார் மூத்த ஆய்வு ஆசிரியர் மற்றும் மருத்துவ உதவி பேராசிரியர் அமீர் ஜரின்பார். இவர் சான் டியாகோ மருத்துவத்துறை, மற்றும் சான் டியாகோ ஹெல்த்தின் இரைப்பை மற்றும் குடல் மருத்துவரும்கூட.

இந்த ஆய்வின் மூலம், ஒரு திரைப்படத்தைப்போலவே, நாள் முழுவதும் பல ஸ்னாப்ஷொட்களை எடுத்து குடலில் நடைபெறும் செயல்பாடுகளை - அதன் தன்மையை அறிய முயற்சித்தனர். இது உணவு மற்றும் நுண்ணுயிர் உடல் எடை அதிகரிப்பு மற்றும் நீரிழிவு ஆகியவற்றையும் பாதிக்கிறது.

**வளர்சிதை மாற்றத்துக்கு உதவும் நுண்ணுயிரிகள்**

குடல் நுண்ணுயிரிகளில் ஏற்படும் சுழற்சி மாற்றங்கள் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியம், ஏனெனில், அவை சர்க்காடியன் சுழற்சி என்ற உயிரியல் கடிகாரத்திற்கு உதவுகின்றன. மேலும் உடலின் குளுக்கோஸ், கொலஸ்ட்ரோல் மற்றும் கொழுப்பு அமிலங்களின் கட்டுப்பாடு மற்றும் ஒட்டுமொத்த வளர்சிதை மாற்ற ஆரோக்கியத்துக்கும் இது முக்கியமாக உதவுகிறது.

**சோதனை மூலம் தகவல்**

ஜரின்பார் மற்றும் அவரது குழுவின் சமீபத்திய ஆய்வுப்பணியில், இந்தக் காரணிகளின் தாக்கம் மற்றும் இடைவினைகளை பற்றி மேலும் தெளிவுபடுத்தியுள்ளனர். குறிப்பாக, இலியம், செரிமானம் மற்றும் உறிஞ்சுதல் தொடர்பான அதன் தனித்துவமான செயல்பாடுகளின் அடிப்படையில். குறிப்பாக, உணவு தூண்டப்பட்ட உடல் பருமன் ( Diet Induced Obesity- DIO) மற்றும் நேர கட்டுப்படுத்தப்பட்ட உணவு (Time-Resticted Feeding-TRF) ஆகியவை எலிகளின் மாதிரிகளில் நுண்ணுயிர் கலவை மற்றும் டிரான்ஸ்கிரிப்டோம்(Transcryptome) (ஒரு உயிரினத்தின் மரபணுவின் புரத-குறியீட்டு பகுதி) ஆகியவற்றை எவ்வாறு மாற்றுகின்றன என்பதையும் அவர்கள் கவனித்தனர்.

எலிகளின் மாதிரிகளில், உடல் பருமன் மற்றும் நேரம் கட்டுப்படுத்தப்பட்ட உணவு (TRF) இல்லாதது (எலிகள் எப்போது வேண்டுமானாலும் சாப்பிடலாம்) குடல் நுண்ணுயிரிகள் தாளகதி (rthyms) மற்றும் குடல் கடிகாரங்களை (Intestinal Clocks) மாற்றியமைக்க உதவும் சமிக்ஞை பாதைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

**குடலுக்கும், மனிதனுக்கும் ஆரோக்கியமான நுண்ணுயிரிகள்**

இந்த கண்டுபிடிப்புகள், ஆரோக்கியமான குடல் நுண்ணுயிரியை பராமரிப்பதிலும், நமது உணவு மற்றும் நேர கட்டுப்படுத்தப்பட்ட உணவு முறைகளின் செல்வாக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. இது வளர்சிதை மாற்ற ஆரோக்கியத்தை நிர்வகிக்கும் சர்க்காடியன் தாளங்களையும் மாற்றியமைக்கிறது என்று ஜரின்பார் கூறினார். மேலும், இது நுண்ணுயிரிக்கும் மனிதனுக்கும் இடையிலான மிகவும் சிக்கலான உறவு, இதில் குடல்வாழ் நுண்ணுயிரிகள், மனிதனின் இரைப்பை குடல், செயல்பாடு மற்றும் ஆரோக்கியத்தை தீர்மானிக்க உதவுகிறது என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆய்வாளர்களின் இப்போதைய பணி என்பது, எதிர்கால ஆய்வுகளில், குடல் எவ்வாறு செயல்படுகிறது அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அல்லது நாளின் நேரத்தில் நுண்ணுயிரியின் நிலையைப் பொருத்து குடல் செயல்பாட்டின் மீது மருந்துகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது பற்றிய குறிப்பிட்ட தகவல்கள் மூலம்/சோதனைகள் மூலம் தெரிவிக்க முடியும்/தெளிவாக அறிய முடியும் என கருத்து தெரிவித்துள்ளனர்.

**கண்ணுக்குத் தெரியாத குடல் நுண்ணுயிரிகள் கட்டுப்பாட்டில் நம் ஆரோக்கியம்**

எப்படி நம் குடலில் வாழும் நுண்ணுயிரிகள் நமது குடலைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன, அதுவும் நம் உடல் நன்மைக்கும், ஆரோக்கியத்துக்கும், நோயெதிர்ப்புத் தன்மைக்கும்கூட அவை காரணமாகின்றன. அந்த நுண்ணுயிரிகளே நம் உடல் பருமனையும் கட்டுப்படுத்துகின்றன என்றால் உண்மையில் வியப்புதான்.

**நன்றி - தினமணி**

# ஒலியால் இயங்கும் சில்லு!



முதலில் எலக்ட்ரோனால் இயங்கும் கணினி சில்லுகள் வந்தன. அடுத்து, ஒளியால் இயங்கும் அதிவேக போட்டோனிக் சில்லுகள், ஆய்வுகூடத்தைவிட்டு வெளியேறத் தயாராகி வருகின்றன.

இந்நிலையில், அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஒலியை வைத்து சில்லுகளை தயாரிக்க முடியும் என்பதை சோதனை அளவில் செய்து காட்டியுள்ளனர். அவர்களது கருத்துப்படி, ஒலியால் இயங்கும் சில்லில், தகவல்களை பதியவும், பரிமாறவும், அதிவேகமாக அலசவும் முடியும்.

ஒலிச் சில்லில், லித்தியம் நியோபேட் என்ற வேதிப்பொருள் வாயிலாக ஒலியைக் கட்டுப்படுத்தும் அமைப்பை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். லித்தியம் நியோ பேட் மீது மின்சாரம் பாயும்போது, அது நெகிழ்வுத் தன்மை அடைந்து, ஒலி அலையை உண்டாக்குகிறது. மின்சாரத்தின் அளவை மாற்றுவதன் மூலம், லித்தியம் நியோபேட் உருவாக்கும் ஒலி அலையை மாற்ற முடியும்.

இந்த ஒலி அலை மூலம் தகவல்கள் ஒலியின் வேகத்தில் கடத்த முடியும். ஒலி அலைகளும் ஒன்றை ஒன்று பாதிக்காமல் பயணிக்கக்கூடியவை. ஒலி அலைகளை நியோபேட் வாயிலாக கட்டுப்படுத்த முடியும். எனவே, ஒலித் சில்லுகளை முழுவீச்சில் தயாரிக்க, ஹார்வர்ட் விஞ்ஞானிகள் தயார்.

## நக்கல் நமசிவாயம்

புதுசா ஒரு ஜனாதிபதி பதவியேற்கும் நிமிஷம்வரை கோட்டா போறது ஷுவர் இல்லை...



## இன்றைய நாளில்...

- 1898 – செனான் தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1971 – அவுஸ்திரேலியாவில் பழங்குடியினரின் கொடி முதன் முறையாகப் பறக்கவிடப்பட்டது.
- 2007 – வவுனியாவில் இலங்கை வான்படையின் கிபீர் வானூர்தியை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தினர்.

# நாட்டில் ஜனநாயகப் போராட்டத்தின் பின்னர் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் பதவி விலக வேண்டுமெனக் கோரி நாடளாவிய ரீதியில் கடந்த ஜூலை 09ஆம் திகதி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.**

**இது தொடர்பில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பல்வேறு கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.**

## போராட்டத்துக்கு ஆதரவானோருடன் பேச்சு நடத்த நாம் தயாராகவுள்ளோம்

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித்**



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை காப்பாற்றுவதற்காக செயற்பட்டோரை விடுத்து போராட்டத்துக்கு ஆதரவானோருடன் பேச்சு நடத்த நாம் தயாராக உள்ளோம்.

நாட்டினதும் மக்களதும் எதிர்காலம் குறித்து அக்கறையுடன் செயற்பட வேண்டிய தேவை, பொறுப்புமிக்க எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் எமக்கு உண்டு.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் மக்கள் ஆணையின்றி பதவி வகிக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவையும் பதவி விலகுமாறு மக்கள் கோருகிறார்கள். நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் காரணமாவார்.

தன்னிச்சையான, ஜனநாயகத்துக்கு எதிரான ஆட்சிக்கு நாம் ஆதரவளிக்கப்போவதில்லை. ஆதலால் பிரதமர் அழைப்பு விடுக்கும் கூட்டத்தில் கலந்துகொள்ள மாட்டோம்.

## மிகப்பெரிய வன்முறைகள் இடம்பெற வழிவகுக்கக் கூடாது

**முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன**



மக்களின் கோரிக்கைக்கு எதிராக ஜனாதிபதியும் பிரதமரும் தொடர்ந்தும் பதவியில் இருக்காது பதவி விலக வேண்டும். இல்லாவிடின் நாட்டில் மிகப்பெரிய வன்முறைகள் இடம்பெறுவதை தவிர்க்க முடியாது.

அதற்கு வழிவகைகளைச் செய்யாமல் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும். நாட்டில் தற்காலிக ஜனாதிபதியாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நியமிப்பது தொடர்பில் சாதகமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

அதன்பின்னர் இடைக்கால அரசாங்கம் அமையும் வரை அனைத்து கட்சித் தலைவர்களின் ஒப்புதலுடன் தேசிய நிறைவேற்று சபை அல்லது தலைமைத்துவ சபையை உருவாக்குவது தொடர்பில் எமது பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

## இடைக்கால அரசாங்கத்தில் பொறுப்பை நிறைவேற்றுவோம்

**மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க**



துரிதமாக தேர்தலுக்கு செல்லும் வரையில் உருவாக்கப்படுகின்ற இடைக்கால அரசாங்கத்தின் நோக்கம் மற்றும் உள்ளடக்கத்திற்கு இணங்க எங்களது கட்சிக்கு வழங்கப்படுகின்ற பொறுப்பினை நிறைவேற்ற தாம் தயாராக உள்ளோம்.

நாட்டில் போராட்டக்காரர்கள் நம்பிக்கை கொண்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார மாற்றத்தை முழுமையாக ஸ்தாபனப்படுத்தி உறுதிநிலையை ஏற்படுத்த முடிவது கிடைக்கின்ற மக்களது ஆணைக்கு ஏற்பவாகும்.

அதுவரையில் மக்களது பொது மற்றும் பிரதான சில பிரச்சினைகள் துரிதமாக தீர்க்கப்பட வேண்டும். இந்த மக்கள் போராட்டத்தின் உண்மையான நோக்கம் பாரிய ஆழமானது. அது முறையாக செய்யப்படவேண்டும். அதன்படி எதிர்வரும் முடிவுகளை துரிதமாக தாம் அறிவிப்போம். முதலில் கோட்டாபய ராஜபக்ஷ, ''மேலும் புதிய புதிய தில்லுமுல்லு வேலைகளை புரியாமால்" உடனடியாக பதவி விலக வேண்டும்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் பல்வேறு வாதப்பிரதிவாதங்களை முன்னெடுத்து அதிகாரத்தில் தொடர்ந்தும் இருப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள முயலாது, அவரும் தனது பதவியிலிருந்து விலக வேண்டும்.

குறிப்பாக, நாட்டில் அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படக்கூடிய நிறைய காரணங்கள் போராட்டத்தில் காணப்படுகின்றன.

அவற்றை நிறைவேற்றுவதற்காக எமது அரசியல் இயக்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று உறுதி வழங்குகிறேன்.

அதுதொடர்பிலான அடுத்த முடிவுகளை விரைவில் அறியத்தருகிறோம். இதுபற்றி குழப்பமடையத் தேவையில்லை.

இந்த வெற்றியை நிலையான வெற்றியாக பரிமாற்றம் செய்துகொள்வற்காக போராட்டத்தின் உட்பொருளை விளங்கிக்கொள்ள வேண்டும். கோட்டாபய - ரணில் ஆகியோரை விரட்டியடிப்பதால் மாத்திரம் அதனை நிறைவேற்ற முடியாது.

## உயர்பீட பதவிகளுக்கு புதியவர்கள் வேண்டும்

**பிவித்துரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில**



ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளுக்கு புதியவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகியோரின் பெயர்கள் எமது கலந்துரையாடலின்போது பரிந்துரைக்கப்பட்டன.

எனினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினருக்கு பெரும்பான்மை உள்ளதன் காரணமாக அவர்களின் தீர்மானம் முக்கியமானதாகும்.

## ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும்

**தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச**



ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் முதலில் பதவி விலகவேண்டும்.

மக்களின் கோரிக்கை அதுவாகவே இருக்கிறது.

நாட்டை நெருக்கடி நிலைமையிலிருந்து மீட்பதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியமாகும். அதனை உருவாக்குவதற்கு தேசிய ரீதியிலான, மக்கள் எதிர்பார்க்கும் செயற்றிட்டம் தொடர்பில் கலந்துரையாடி வருகிறோம்.

நாட்டில் தற்காலிக ஜனாதிபதியாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடமையாற்ற வேண்டியதுடன், அதன் பின்னரான நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றம் கூடித் தீர்மானிக்க வேண்டும்.

அனைவரும் இனங்கக்கூடிய ஆட்சியை தற்காலிகமாக நடத்துவதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறோம்.

ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 11.07.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 131 1 35 | 142 50 3 |
| கனேடியன் டொலர் | 162 8031 | 175 0060 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 3 24 | 44 387 |
| யூரோ | 250 0580 | 264 4410 |
| ஜப்பான் யென் | 1 4868 | 1 6 21 |
| சிங்கப்பூர் டொலர் | 142 7854 | 153 2183 |
| ஸ்ரேலிங் பவுன் | 315 3402 | 332 324 |
| சுவிஸ் பிராங்க் | 252 3 | 268 4477 |
| ஐ.அ.டொலர் | 246 6822 | 257 2863 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 847 3388 |
| குவைட் | குவைட் தினார் | 0,063 82 8 |
| ஓமான் | ஓமான் றியால் | 827 4481 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 4273 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 14 8 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 2663 |

# புத்தளம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மறு அறிவித்தல்வரை தொடர் பணிப்பகிஷ்கரிப்பில்

**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்றுமுதல் மறு அறிவித்தல்வரை தொடர் பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வாரம் (06) பொதுநிர்வாக அமைச்சு வெளியிட்ட சுற்றுநிருபத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமக்குத் தேவையான எரிபொருள் வழங்கக் கோரியுமே சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்படி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்துவரும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எரிபொருள் இன்றி சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், இதனால் அவர்களுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரி கடந்த 6ஆம் திகதி பொதுநிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் அறிவுறுத்தலுக்கமைய, நாடு முழுவதும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்றுமுதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர், பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், சமுர்த்தி பணிப்பாளர், அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை கவனத்தில் கொள்ளாமல் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக காலம், நேரம் பாராமல் வங்கி மற்றும் கிராமங்களில் பணியாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் பிரச்சினை இருப்பதாக சுட்டிக்காட்டிய புத்தளம் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தங்களை மலினப்படுத்தும் வகையில் கண்டுகொள்ளாமல் இருப்பதும் வேதனையளிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்தத் தீர்மானம் பொதுமக்களை பழிவாங்கும் நோக்கம் அல்ல என்றும், தமக்குத் தேவையான எரிபொருளை கோருவதே தோக்கமாகும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு புத்தளம் மாவட்ட அனைத்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் நேற்றுமுதல் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்து வரும் நிலையில், சமுர்த்தி முகாமையாளர்கள் பணிக்கு சமுகமளித்திருந்தனர்.

இதனால், நேற்றைய தினம் சமுர்த்தி வங்கிகள் முகாமையாளர்களினால் திறக்கப்பட்டபோதிலும், அங்கு உத்தியோகத்தர்கள் சமுகமளிக்காமையால் வங்கி செயற்பாடுகள் அனைத்தும் நேற்றைய தினம் ஸ்தம்பிதமடைந்தன. இதனால், சமுர்த்தி வங்கிக்கு வருகை தந்த பொதுமக்கள் திரும்பிச் சென்றமையை அவதானிக்க முடிந்தது.

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு!



மரதகஹாமுல்ல, படல்கம வீதியில் தம்மிட்ட புத்தகசாலைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக படல்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார்சைக்கிளும் வேனொன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. கெஹெல்எல்லே பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய அசித் ரங்கன மற்றும் தம்மிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய சிந்தக்க புஸ்பகுமார ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து இடம்பெற்றச் சம்பவத்தில் மோட்டார்சைக்கிளில் மூவர் பயணித்துள்ளதுடன், அவர்களில் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். காயங்களுக்குள்ளான மற்றையவர் மீகமுவ மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



சுமார் 3 மாத காலத்திற்குப் பின்னர் நேற்று எரிவாயு விநியோகிக்கப்பட்டது. அந்த+வகையில் நேற்று கொழும்பு குணசிங்கபுர பகுதிவாழ் மக்களுக்கு விநியோகிக்கவென லிட்ரோ எரிவாயு கொள்கலன் வருகை தந்தபோது பிரதேசவாசிகள் குணசிங்கபுர விளையாட்டு மைதானத்தில் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்குகாக சூழ்ந்துகொண்டபோதான காட்சிகள்.

(படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)




# புஸல்லாவை – பெரட்டாசி பஸ் விபத்து;

# இருவர் உயிரிழப்பு

## பஸ்ஸை எரித்த மக்கள்





(க.கிஷாந்தன்)

புஸல்லாவை, காச்சாமலை வீடன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் சிலர் காயமடைந்துள்ளதோடு, விபத்தினால் ஆத்திரமடைந்த மக்கள் பஸ்ஸையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

புஸ்ஸலாவ, பெரட்டாசி தோட்டத்திலிருந்து புஸ்ஸலாவை நகரத்துக்கு பயணிகளை ஏற்றிவந்த பஸ்ஸொன்றே நேற்றுக் காலை வீடன் பகுதியில் வைத்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. இதில் மிதிபலகையில் பயணித்த இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். பஸ் மண்திட்டில் சாய்ந்தமையினால் குறித்த இருவரும் மண்திட்டில் சிக்குண்டு பலியாகியுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் பெரட்டாசி தோட்டத்தில் வசிக்கும் சுரேன்ஜித் புஷ்பகுமார் (39 வயது) மற்றும் ஹெல்போட 7 ஆம் கட்டை தோட்டத்தில் வசிக்கும் விஜயகுமார் கவிஷ்கர் (20 வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுமார் 80 பேர் வரை பஸ்ஸில் பயணித்துள்ளனர். அதிகளவான பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்ததாலேயே இவ்விபத்து. இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. மேலும் குறித்த பஸ்ஸில் பலர் மிதிபலகையில் தொங்கிக்கொண்டு பயணித்துள்ளதால் பஸ் ஒரு பக்கத்தில் சாய்ந்துக்கொண்டு சென்றுள்ளது.

சிறு காயங்களுக்குள்ளானவர்கள் ஆரம்பகட்ட சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் புஸல்லாவை, வகுவப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, விபத்து சம்பவத்தால் ஆத்திரமடைந்த மக்கள், பஸ்ஸை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். இச்சம்பவம் குறித்து பெரட்டாசி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பஸ் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# 3,300 லீற்றர் எரிபொருள் பௌசர் விபத்து:

# அடித்துப்பிடித்துக்கொண்டு டீசலை சேமித்த மக்கள்



ஹப்புத்தளையில் சம்பவம்

(பதுளை நிருபர்கள்)

நாட்டில் கடும் எரிபொருள் தட்டுப்பாடுகளுக்கு மத்தியில் திருகோணமலை எரிபொருள் முனையத்திலிருந்து பதுளை நோக்கி பயணித்த எரிபொருள் தாங்கி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளாகிய எரிபொருள் தாங்கியிலிருந்து எரிபொருள் கசிந்தபோது அதனை அங்குள்ள மக்கள் அடித்து பிடித்துக்கொண்டு பல பீப்பாய்களில் நிரம்பிக்கொண்டனர்.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு உக்கிரமடைந்துள்ள போது, கடந்த சில நாட்களாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகிக்காத நிலையில், இந்தியன் ஒயில் நிறுவனமாக ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மாத்திரமே கடந்த 10ஆம் திகதிமுதல் விநியோகம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிலையில், திருகோணமலை எரிபொருள் முனையத்தில் இருந்து ஹப்புத்தளை நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு 3 ஆயிரத்து 300 லீற்றர் டீசல் தொகை ஏற்றிச்சென்ற எரிபொருள் தாங்கி ஒன்று ஹப்புத்தளை பங்கெட்டிய முஸ்லிம் கல்லூரிக்கு அருகில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹப்புத்தளை பிரதேசத்தில் இந்த நாட்களில் மழை மற்றும் பனிமூட்டமான காலநிலை நிலவுகின்ற நிலையிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான எரிபொருள் தாங்கியிலிருந்த எரிபொருள் கசியத்தொடங்கியதால், எரிபொருளின்றி தவிக்கும் அருகிலுள்ள மக்கள் எரிபொருளை சேமிப்பதற்கு அடித்துப் பிடித்துக்கொண்டு வந்து, பல பீப்பாய்களில் நிரம்பிக்கொண்டு சென்றனர்.



இதேவேளை, சீரற்ற காலநிலை மற்றும் வாகனத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே விபத்துக்குக் காரணம் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பஸ் போக்குவரத்துகள் முடக்கத்தால் உயிருக்கு ஆபத்தான நிலையில் பயணம்

(தலவாக்கலை நிருபர்)



மலையகத் தோட்டப்பகுதி வீதிகளில் மிகக் குறைந்தளவிலான பஸ்களே சேவையில் ஈடுபடுவதால் அவற்றில் பயணிப்பது தமது உயிருக்குப் பாரிய ஆபத்தாக மாறியுள்ளதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

தனியார் பஸ்களுக்கு டீசல் கிடைக்காததாலும், இலங்கை போக்குவரத்து சபை பஸ்களுக்கு ரயர் கிடைக்காததாலும், மலையகப் பகுதிகளில் சேவையில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

தங்கள் தேவைகளுக்காகவும் அன்றாட கடமைகளுக்காகவும் நகரங்களுக்குச் சென்று வரும்போதும் பஸ்களின் மேற்கூரை, முன், பின்பகுதியில் காணப்படும் பொதிகள் வைக்கும் இடங்கள் மற்றும் கதவுகளில் தொங்கியபடியும் மிகவும் ஆபத்தான பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தின் சில தோட்ட வீதிகளில் தனியார் மற்றும் அரச பஸ் சேவைகள் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் பல வீதிகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பஸ்கள் கால அட்டவணையின்றி இயங்குவதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

# இன, மத சாயமற்ற - மக்கள் ஏற்றுக்கொள்ளும் அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

''இன, மத சாயமற்ற - மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசு உதயமாக வேண்டும். ஊழல் அற்ற ஒருவர் அரச தலைவராக வேண்டும். அதற்கான சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது" - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

9ஆம் திகதி என்பது, இலங்கையில் மாற்றங்கள் நிகழும் நாளாக மாறியுள்ளது. மே 9 மஹிந்த பதவி விலகினார். ஜூன் 9 பெஸில் பதவியை விட்டு விலகினார். ஜூலை 9 பதவி விலகும் அறிவிப்பை ஜனாதிபதி கோட்டாபய விடுத்தார்.

அதுமட்டுமல்ல, பௌத்த பிக்குகளால் முன்னிலைப்படுத்தப்பட்ட ஜனாதிபதி, பௌத்த தேரர்களாலும் வாக்களித்த மக்களாலும் விரட்டியடிக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இலங்கை




அரசியல் வரலாற்றில் இது முக்கிய திருப்புமுனையாகும்.

அடுத்துவரும் நாட்களில் அரசியல் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. நாடாளுமன்றமும் அவசரமாகக் கூடும். ஊழலற்ற ஒருவர், அரச தலைவராக வேண்டும். அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

இதேவேளை, மக்களுக்கு தகவலறியும் உரிமை இருக்கின்றது. அந்தப் பணியை ஊடகங்கள் ஆற்றுகின்றன. ஜனாதிபதி பதவி விலகுவதில் ஊடகங்களின் பங்கும் உள்ளது. சிறந்த வேலையை அவை செய்துள்ளன. அப்படியிருக்கையில், போராட்டக்களத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன். பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களே, தாக்குதல் நடத்தியமை கவலைக்குரிய விடயமாகும்.

மஹிந்த ஆட்சியில் ஊடக அடக்குமுறை தலைவிரித்தாடியது. நியுஸ்பெஸ்ட் ஊடகம் அதிக அச்சுறுத்தலை எதிர்கொண்டிருந்தது. தற்போதும் அந்நிறுவனத்தின் ஊடகர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இது ஜனநாயகத்துக்கு விழுந்த அடியாகும் - என்றார்.

### நுவரெலியா பிரதேச சபைத் தலைவரின்

# வாகனம் விபத்து!

### மதுபோதையில் செலுத்தியதால் விபரீதம்



நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் வேலு யோகராஜ் பயணித்த வாகனம் கந்தப்பளை- ராகலை வீதியில் நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளாகியுள்ளது. இச்சம்பவத்தில் சிறுகாயங்களுடன் அவர் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

கந்தப்பளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கொண்டாட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்ட யோகராஜ், மதுபோதையில் வாகனத்தை செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கட்டுப்பாட்டை மீறிய வாகனம் மரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதுடன் அந்த வாகனம் கடுமையான சேதங்களுக்குள்ளாகியுள்ளது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பெருந்தோட்டப் பகுதிகளில் 88 சதவீத பெண்கள் தொழில் இழப்பு

## பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி தெரிவிப்பு

(கண்டி நிருபர்)



பெருந்தோட்டப் பகுதி பெண்களில் அதிகமானோர் முறைசாரா தொழில் துறைகளிலே ஈடுபடுகின்றனர். அவர்களில் 88 சதவீதமானவர்கள் தொழில் உரிமைகளை இழந்தவர்களாக உள்ளதாக கண்டியை தலைமையகமாகக்கொண்டு இயங்கும் பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி தெரிவித்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட அதன் பொதுச் செயலாளர் திருமதி லோகேஸ்வரி சிவப்பிரகாசம் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், -

பொதுவாக நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் 60 சதவீதமானவர்கள் தோட்டங்களை விட்டு வெளியே சென்று தமது அன்றாட உழைப்பை மேற்கொண்டு வருவதாக தமது ஆய்வுகள் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக ஏற்பட்ட வேலை இழப்பு மற்றும் தற்போதைய அரசியல் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக அத்தியாசியப் பொருட்களின் விலையேற்றம் போன்ற காரணங்களால் அன்றாட வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்க முடியாதவர்களாக உள்ளனர்.

அதேநேரம் தோட்டங்கள் துண்டாடப்படுதல் உட்பட பல காரணங்களாலும் தோட்ட மக்கள் வேலை இழந்து வருகின்றனர். எனவே, கண்டி, நுரெலியா, கேகாலை மற்றும் அம்பாறை மாவட்டங்களை அடிப்படையாகக்கொண்டு தமது அமைப்பு கடந்த பல வருடங்களாக ஆய்வுகளை மேற்கொண்டது. அதனடிப்படையில் தற்போது பெருந்தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த அதிகளவானோர் வெளியே செல்கின்றனர். அவர்களில் 88 சதவீதமான பெண்களுக்கு தாம் அன்றாடம் மேற்கொள்ளும் தொழில்களில் எதுவித தொழில் உரிமைகளும் கிடைப்பதில்லை.

ஊழியர் சேமலாக நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற எந்த நிதி உதவிகளும் இல்லாது இருப்பதுடன், தொழில் சட்ட உரிமைகளும் இல்லாதுபோயுள்ளன. தமது தொழிலுக்கான நேர அட்டவணை அல்லது விடுமுறை பற்றி வரையறைகளோ இல்லை. எனவே, தமது அமைப்பு பெருந்தோட்டப் பகுதிகளிலிருந்து வெளிச்செல்லும் தொழிலாளர்களில் தொழில் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவும் அவர்ளை வலுவூட்டவும் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

88 சதவீதமானவர்கள் தொழில் உரிமைகளை இழந்தபோதும் ஏனைய 12 சதவீதமானவர்கள் சில வரையறுக்கப்பட்ட ஆடைத் தொழில் துறைகளிலும் மற்றும் சில அரச துறை வேலை வாய்ப்புகளிலும் அவர்கள் ஓரளவிற்கு தொழில் உரிமைகளை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்தார்.





நுவரெலியாவில் தெரிவுசெய்யப்பட்ட 250 வறிய குடும்பங்களுக்கு சீனா நாட்டு செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிககளை சீனத் தூதுவர் குய் ஜென்ஹாங் வழங்கியபோது..
(தலவாக்கலை நிருபர்)

# யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் ஏழாவது சமகால சர்வதேச மாநாடு

(யாழ். நிருபர்)

திருமூலரால் சிவபூமி என அழைக்கப்பெற்ற திருமிகு வள நாட்டின் சிரசாம் யாழ்ப்பாணத்தில், நஞ்சையோடு புஞ்சையுமாய் நல் நிலங்களையும் வருடமெல்லாம் நீரை குறைவின்றி வழங்கும் நீர்ச்சுணைகளையும் இயல்பாய் – இயற்கையாய் கொண்டமைந்த திருநெல்வேலியில் நவீன உலகில் பல்கலைக்கழகங்களின் தோற்றத்துக்கு முன்னரே ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட குருகுல கல்வி அமைப்புகள் ஊடாக எம்மவர்கள் அறிவியல் உலகுக்கு அறிவினையும், அறத்தினையும் போதித்தார்கள். அந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற மகுட வாசகத்துக்கு உயிர் கொடுக்குமுகமாக அறிவுசார் சேவைகளை இவ்வுலகுக்கு வழங்கி வருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற பீடங்களில் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமானது முதன்மையானதாகவும், தனித்துவமானதாகவும் மிளிர்கின்றது.

இந்தப் பீடமானது முகாமைத்துவம் மற்றும் வணிகதுறைசார் கற்பித்தல், கற்றல், ஆய்வு மற்றும் புலமைப்பரிசிலில் சிறந்து விளங்கும் ஒரு முன்னணி மையமாக விளங்கவேண்டும் என்ற தூரநோக்குக்கு அமைவாகத் தனது சேவை வழங்கல் செயற்பாட்டைக் கற்பித்தல் செயற்பாடுகளுடன் மட்டுப்படுத்திக்கொள்ளாது, ஆய்விலும் ஏனைய கல்விசார் மற்றும் கல்விசாரா சேவை வாழங்குவதிலும் ஈடுபடுகின்றது.

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் அறிவியல் துறைக்கான பங்களிப்பின் ஓர் அங்கமாக 2014ஆம் ஆண்டிலிருந்து "சமகால முகாமைத்துவம் பற்றிய சர்வதேச மாநாடு (International Conference on Contemporary Management - ICCM)" என்ற தொனிப்பொருளில் வருடாந்தம் ஆய்வு மாநாடுகளை நடத்தி வருகின்றது.

அந்தவகையில் முதலாவது சர்வதேச ஆய்வு மாநாடு 2014ஆம் ஆண்டு "நிலைபேண் வளர்ச்சியினை நோக்கி மக்களுக்கான வலுவூட்டல் (Empowering People towards Sustainable Development) " என்ற தொனிப் பொருளிலும், 2015ஆம் ஆண்டு "புதியனபுனைதல் மற்றும் அறிவுப் பரப்புகளின் மூலமாக உற்பத்தியினை தூண்டுதல் (Driving Productivity through knowledge & Innovation)" என்ற தொனிப்பொருளிலும், 2016ஆம் ஆண்டு "சமகால சிக்கல்களுக்கான முக்கியமான தீர்வுகள் (Critical Solutions for Contemporary Issues)" என்ற தொனிப்பொருளிலும் இடம்பெற்றது.

2017ஆம் ஆண்டு "சவால்களுக்கு அப்பால் நிலைபேண்; தன்மைக்கான ஊக்கமளிக்கும் உறுதிமொழிகள் (Inspiring Pledge for Sustainability Over Challenges)" தொனிப்பொருளிலும்,




2019ஆம் ஆண்டு "சிறந்த எதிர்காலத்தைநோக்கி மனித மூலதனத்தை மறுவடிவமைத்தல் (Reshaping Human Capital towards Better future)" என்ற தொனிப்பொருளிலும் இடம்பெற்றது.

2019ஆம் ஆண்டு நிகழ்நிலைத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஆறாவது ஆய்வு மாநாடு "பொருளாதார மீள் தன்மை நோக்கி நிலைபேண் வளர்ச்சியிக்கான சிக்கல்கள் மற்றும் சவால்கள் தீர்ப்பதற்கான தீர்மானங்களை அபிவிருத்தி செய்தல் " (Issues and Challenges of Sustainable Development Fostering Resolutions towards Economic Resilience) " என்ற தொனிப்பொருளில் உலகப் புகழ்பெற்ற அறிவியல் மேதைகளான பேராசிரியர் கேறி டெஸ்லர், ஏ.பரசுராமன் மற்றும் பேராசிரியர் ஐ.எம்.பன்டி போன்றவர்களின் முக்கிய உரைகளுடன் இடம்பெற்றது.

ஏழாவது மாநாடு "புதிய இயல்பில் மீள்தன்மைக்காக வணிகத்தை மாற்றுதால் (Transforming Business for Resilience in New Normal)" என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 14ஆம் திகதி முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதன் நேரலை நிகழ்வுகள் http://www.iccm.maco.jfn.ac.lk என்ற தளத்தினூடாக பகிரப்படவுள்ளன.

இந்த ஆய்வு மாநாட்டில் அவுஸ்திரேலியாவின் சதேர்ண் குறொஸ் பல்கலைக்கழகத்தின் (Southern Cross University) தகவல் அமைப்புகள் முறையின் புகழ்பூத்த பேராசிரியர் தர்சனா செடெராவின் முதன்மை உரை அவுஸ்திரேலியாவிலிருந்து நிகழ்நிலை வாயிலாக இடம்பெறவுள்ளது.

இவ்வாய்வு மாநாட்டில் கணக்கியல் மற்றும் நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகச் சங்கிலி, முயற்சியாண்மையும் புதியன புனைதலும், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், மனித வள முகாமைத்துவம் மற்றும் நிறுவனக் கற்கைகள், கற்றல் கலாசாரம் மற்றும் சமூகம் ஆகிய 07 உப பிரிவுகளின் கீழ் 43 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இவற்றுடன், மாணவர்களின் அறிவு மற்றும் ஆய்வுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் மாணவர் ஆய்வு மாநாடும் (Student Research Symposium) ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அதற்காக 6 ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆய்வுகளின் முடிவுகள் நலிந்துபோயுள்ள வணிக சமூகத்தின் இயலுமையைக் கட்டியெழுப்ப வகை செய்வதுடன், தொடர்ந்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமும் ஆய்வுகள் மூலமாகவும் பிராந்திய, நாட்டின் பொருளாதார மற்றும் வணிக மறுமலர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் என்பதில் ஐயமில்லை.

இம் மாநாட்டுக்கு எமேரல்ட் பதிப்பகம் (Emerald Publishing) கல்விசார் பங்காளியாகவும், இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் ( Institute of Bankers of Sri Lanka ), இலங்கை பட்டய நிதி பகுப்பாய்வாளர் சமூகம் ( CFA Society Sri Lanka ), இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (Sri Lanka Institute of Marketing ), பட்டயக் கணக்காளர் நிறுவனம் ( Charted Accountants of Sri Lanka ), பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் ( Association of Charted Certified Accountants) ஆகியன தொழில்முறை பங்காளர்களாகவும் அனுசரணை வழங்குகின்றன.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## சங்கானை கிணற்றிலிருந்து வயோதிபப் பெண்ணின் சடலம் மீட்பு!

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி வீதி, சங்கானை பகுதியிலுள்ள கிணறொன்றிலிருந்து வயோதிப பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் நரம்புத்தளர்ச்சி நோயினால் பாதிக்கப்பட்டவர் என்றும் "நான் உங்களுக்கு தொந்தரவாக இருப்பதற்கு விரும்பவில்லை" என்றும் உறவினர்களுக்கு கூறியதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலமானது யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

சங்கானை பகுதியைச் சேர்ந்த கந்தையா அன்னம்மா (வயது 81) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தென்னிலங்கை அரசியல் குழப்பங்கள் மக்கள்நலச் செயற்பாடுகளில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது

### கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

தென்னிலங்கையில் ஏற்படுகின்ற அரசியல் குழப்பங்களும், அரசியல் மாற்றங்களும், எமது மக்கள்நலச்செயற்பாடுகளில் எந்தவிதமான மாற்றத்தினையும் ஏற்படுத்தாது - என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான யாழ். ராணி புகையிரத சேவை நேற்று (11) திங்கட்கிழமை காலை ஆரம்பிக்கப்பட்டது.

அது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான அரசாங்கஉத்தியோகத்தர்கள்மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்களின் கோரிக்கைக்கமைய கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

குறித்த கோரிக்கை, சம்பந்தப்பட்ட தரப்புகளினால் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட நிலையில், அதனை துறைசார்ந்த அமைச்சருடன் கலந்துரையாடி, இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்திருந்தேன். கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கும் இந்தச் சேவை மிகவும் வரப்பிரசாதமாகும்.

இச்சேவையை வவுனியா வரையில் விஸ்தரிக்கவேண்டும் என்ற கோரிக்கையினையும் பல்வேறு தரப்பினரும் முன்வைத்து வருகின்றனர். அதுதொடர்பாக ஆராய்ந்து, சாத்தியமான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

தற்போது புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பது போன்று, விரைவில் தமிழகத்திற்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான சரக்கு கப்பல் சேவையும், பலாலி சர்வதேச விமான நிலையத்திற்கான விமான சேவையும் இடம்பெறும்.



எமது மக்கள் எமக்கு வழங்குகின்ற ஆணையை எமக்கானபலமாகக்கொண்டு, தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக தென்னிலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடி எமது மக்களின் எதிர்பார்ப்புகளையும் அரசியல் அபிலாஷைகளையும் வென்றெடுப்பதே எமது வழிமுறையாக இருக்கின்றது.

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதற்கமைய தமது பயணமும் மக்கள் நலன் சார்ந்த வேலைத் திட்டங்களும் தொடர்ச்சியாக முன்னகர்ந்துகொண்டே இருக்கும் - என்றுள்ளது.

## 'யாழ்ராணி' விசேட ரயில் சேவை நேற்று ஆரம்பம்





**யாழ்ராணி புகையிரதம் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் நேரம்**

| காங்கேசன்துறை | சுன்னாகம் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | அறிவியல் நகர் | முறிகண்டி |
|---|---|---|---|---|---|---|---|
| 6.00 | 06.18 | 06.40 | 07.00 | 07.12 | 07.57 | 08.05 | 08.30 |
| 14.00 | 14.08 | 14.39 | 14.59 | 15.11 | 15.56 | 16.04 | 16.10 |

காங்கேசன்துறையிலிருந்து முறிகண்டி வரை அனைத்து புகையிரத நிலையங்களிலும் நிறுத்தப்படும்

**யாழ்ராணி புகையிரதம் முறிகண்டி மற்றும் கிளிநொச்சியிலிருந்து புறப்படும் நேரம்**

| முறிகண்டி | அறிவியல் நகர் | கிளிநொச்சி | கொடிகாமம் | சாவகச்சேரி | யாழ்ப்பாணம் | சுன்னாகம் | காங்கேசன்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| | | 10.00 | 10.48 | 11.00 | 11.20 | 11.38 | 11.55 |
| 16.40 | 16.47 | 17.00 | 17.48 | 18.00 | 18.44 | 19.02 | 19.20 |

முறிகண்டியிலிருந்து காங்கேசன்துறை வரை அனைத்து புகையிரத நிலையங்களிலும் நிறுத்தப்படும்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்துக்கும்-கிளிநொச்சிக்கும் இடையே 'யாழ்ராணி' என்ற விசேட ரயில் சேவை நேற்று (11) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச பணியாளர்கள் மற்றும் அறிவியல்நகர் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்களுக்கு வசதியாக இச்சேவையை ரயில் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி யாழ்ராணியின் ரயில் சேவை காங்கேசன் துறையிலிருந்து காலை 06 மணிக்கு புறப்பட்டு காலை 8.11க்கு முறிகண்டியை அடையும்.

அங்கிருந்து மீண்டும் காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் ரயில் காலை 11.20இற்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் ரயில் மாலை 4.10இந்கு முறிகண்டியை வந்தடையும்.

முறிகண்டியிலிருந்து மீண்டும் 4.40இற்கு புறப்படும் இந்தரயில் இரவு 7.20க்இற்குகாங்கேசன்துறையை சென்றடையும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஒரு வழிக் கட்டணமாக 90 ரூபாவும்யாழ்ப்பாணத்திலிருந்து பளைக்கு 60 ரூபாவும் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்துக்கு 35 ரூபாவும் கட்டணம் அறவிடப்படும்.

## டீசலின்றி எரிபொருள் வரிசையில் காத்திருக்கும் 1990 அவசர அம்பியூலன்ஸ் சேவை வாகனங்கள்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் டீசலின்றி 1990 சுவசெரிய சுகப்படுத்தும் அம்பியூலன்ஸ் சேவை வாகனங்கள் எரிபொருள் வரிசையில் காத்திருக்கின்றன.

வருடத்தின் 365 நாட்களும் இரவு - பகல் பாராது எவ்வித கட்டணமும் அறவிடாது இலவசமாக சேவையை வழங்குகின்ற 1990 சுவசெரிய சேவையானது தற்போது அம்பியூலன்ஸுக்கான டீசல் இன்மையினால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளது.

இதன் காரணமாக வவுனியா மாவட்டத்தின் 1990 அவசர அம்பியூலன்ஸ் சேவையை தற்காலிகமாக இடைநிறுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், வவுனியா நகரிலுள்ள எரிபொருள் நிலையத்தில் டீசலை பெற்றுக்கொள்வதற்காக 1.5 கிலோமீற்றர் தூரத்தில் எரிபொருள் வரிசையில் அன்பியூலன்ஸ் வாகனம் மூன்று




நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த சேவைக்கான டீசல் இலங்கை போக்குவரத்து சபை வவுனியா சாலையூடாக வழங்கப்பட்டபோதிலும் திங்கள் - வெள்ளி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை மாத்திரமே வழங்கப்படுவதுடன், வார இறுதி நாட்களில் எரிபொருள் இல்லாமல் குறித்த சேவைகள் வழங்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

கடந்த வாரங்களில் இ.போ.சவினரால் மேற்கொள்ளப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக எரிபொருள் பெறமுடியாத நிலையும் ஏற்பட்டதுடன், ஐ.ஓ.சி. எரிபொருள் விற்பனை நிலையத்தில் அவசர சேவைக்கான எரிபொருட்கள் கையிருப்பில் வைத்துக்கொள்ளப்படாத நிலைமையும் உள்ளது.

தற்போது நிலவிவரும் எரிபொருள் நெருக்கடியால் பொதுமக்களின் போக்குவரத்து முற்றாக முடங்கியுள்ள நிலையில், கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு திடீர் நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல முடியாமல் இறப்புகள் பதிவாகக்கூடிய அதிக சந்தர்ப்பம் உள்ளது.

சீட்டிலுக்கப்பட்ட திகதி 10.07.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4811
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,410,020.00
அச்சிடப்பட்ட திகதி : 09.07.2022
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 4 5 1 5 5 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,422,758.40

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 09.07.2022
சீட்டிழுப்பு இலக்கம் 1289
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 469,140.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 2 6 3 7 6 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,178,970.00

கொவிசெத Govisetha
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.07.09 சீட்டிழுப்பு இலக்கம் 3053
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,171,800.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 17 25 69 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,211,965.60

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /07/09
சீட்டிழுப்பு இலக்கம் : 841
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 629,440.00
V 04 09 44 71
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,595,222.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 120
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,362,600.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 09.07.2022
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 43 51 54 57
விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,964,502.40

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1159
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி: 2022.07.09
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 840,160.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 260,269,906.00
J 08 04 29 76 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# ஊடகவியலாளர்கள் மீதான இராணுவத்தினரின் தாக்குதல் ஆட்சியாளர்களின் இயலாமையை வெளிக்காட்டுகின்றது

## அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்




(மட்டக்களப்பு நிருபர்)

ஊடகவியலாளர் மீது பாதுகாப்புப் படையினர் தாக்குதல் மேற்கொள்வது ஒரு நாட்டின் ஆட்சியாளர்களின் இயலாமையை காட்டுகின்றது. எனவே, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதுடன், இந்தத் தாக்குதல் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படவேண்டுமென அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வலியறுத்தியுள்ளது.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை கண்டித்து அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் நேற்று (11) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி இரவு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வீட்டுக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது நேரடியாக செய்தி வழங்கிக்கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் ஏழு பேர் மீது பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது ஒரு மிலேச்சத்தனமான செயலாகும் ஊடக சுதந்திரத்தை முற்றாக மழுங்கடிக்கும் செயற்பாடாகவே அமைந்திருக்கின்றது.

ஒரு நாட்டின் நான்காவது தூணாக ஊடகம் காணப்படுகின்றது. இந்த ஊடகவியலாளர்மீது இந்த நாட்டில் தொடர்ச்சியாக படுகொலை தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

அதேவேளை, இவ்வாறு தொடர்ச்சியாக ஊடகவியலாளர் மீது ஆட்சியர்களால் தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பாதுகாப்புப் படையினருக்கு எதிராக பாரபட்சமற்ற உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு, நீதி நிலைநாட்டப்படவேண்டும். படையினரும் பொலிஸாரும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் நன்கு அவதானம் செலுத்தி அவர்களது கடமைகளை தங்குதடையின்றி செய்வதற்கு வழிவகை செய்யவேண்டியது அவசியமாகும் - என ஒன்றியத்தின் தலைவர் க.சரவணன், செயலாளர். எஸ்.துசியந்தன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஒருவர் இரு தடவைக்கு மேல் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கமுடியாதென சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்

## ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் வலியுறுத்து



(மாளிகைக்காடு நிருபர்)

ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்பதுபோல் ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் தொடராக நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க முடியாதென சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் - என ஐக்கிய காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரண்டு தடவைக்கு மேல் இருந்தால் எப்படி களவெடுப்பது, எப்படி நாட்டை கொள்ளையடிப்பது, எப்படி சமூகத்தை ஏமாற்றுவது என்பதை படித்துக்கொள்கின்றனரே தவிர சேவையாற்றுகின்றார்கள் இல்லை.

நாடு மிக மோசமான நிலைக்கு வரக்காரணம் கடந்த 20 வருடமாக ஒரே ஆட்கள் பெரும்பாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதுதான்.

ஜனாதிபதி இரண்டு தடவைக்கு மேல் பதவியில் இருக்க முடியாது என்பதை ஆர்வமாக செயல்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சித்தலைவர்களும் ஒருவர் இரு தடவைகளுக்கு மேல் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க முடியாது என்ற சட்டத்தை கொண்டுவர முயற்சிக்காமை மூலம் இவர்கள் சுயநலக்காரர்கள் என்பது தெளிவாகின்றது என்று தெரிவித்துள்ளார்.

# கிண்ணியாவில் எரிபொருள் தீர்ந்து வீதியில் பயணிகளுடன் நின்ற இ.போ.ச. பஸ்



(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா - கந்தளாய் ஊடான பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று எரிபொருள் தீர்ந்துபோனதால் வீதியில் பயணிகளுடன் நின்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் கிண்ணியா சாலைக்கு சொந்தமான பஸ்ஸே இவ்வாறு டீசல் தீர்ந்துபோனதால் கந்தளாயிலிருந்து கிண்ணியா நோக்கி பயணிக்கையில் தம்பலகாமம் - கிண்ணியா பிரதான வீதியில் பயணிகளை ஏற்றியவாறு நின்றுள்ளது.

தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு நிலையே இதற்கான காரணமாகும் என தெரியவருகிறது. மீண்டும் கிண்ணியா பஸ் டிப்போவிலிருந்து டீசல் பெறப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இதனால் சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக பொதுப் போக்குவரத்து பயணிகள் காத்திருந்ததாக தெரிவிக்கின்றனர்.



# “பிரதமர் பதவி விலகுவது அரசியலமைப்பிற்கு முரணானது; வஜிர அபேவர்தனவுக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை”

## கிண்ணியா நகரசபை உறுப்பினர் மஹ்தி சாடல்

(கிண்ணியா நிருபர்)

பிரதமர் ரணில் பதவி விலகுவது அரசியல் யாப்பிற்கு முரணானது என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் வஜிர அபேவர்தன கூறியிருப்பது அவருக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது - என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

நேற்று (11) அவரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது, இரண்டு மாதங்களையும் தாண்டிச் செல்கின்ற தன்னெழுச்சி மக்கள் போராட்டம் ஜனாதிபதி, பிரதமர் இருவரையும் பதவி விலகிச் செல்லுமாறு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, மற்றும் அலரி மாளிகையை தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ள போராட்டக்காரர்கள் அவ்விருவரும் பதவி விலகாதவரை இங்கிருந்து வெளியேற மாட்டோம் என உறுதிபட கூறுகிறார்கள்.

தற்போது என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்று கூட அறியாது பிரதமர் பதவி விலகுவது அரசியல் யாப்பிற்கு முரணானது என ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் வஜிர அபேவர்தன கூறுவது அவர் இன்னும் மயக்கம் தெளியாமல் இருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்துகின்றது எனவும் கூறியுள்ளார்.

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நடப்பாண்டுக்கான இணைப்பாளர்கள் தெரிவு

(பொலிவேரியன் நிருபர்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 2022-2023ஆம் நடப்பு ஆண்டுக்கான மாவட்ட இணைப்பாளர்களாகச் செயற்குழுவால் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்களை தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் கையொப்பமிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதனடிப்படையில், அம்பாறை - ஏ.எல்.எம்.சலீம், எம்.எப்.எம்.நவாஸ், கொழும்பு - அஸ்ரப் ஏ சமத், களுத்துறை - ஏ.எல்.எம்.அஸ்வர், கம்பஹா - எஸ்.ஏ.எம்.பவாஸ், குருநாகல் - யூ.எல்.முஸம்மில், புத்தளம் - எம்.எம்.சியாஜ், ரம்சின் றசீன், பொலன்னறுவை - எம்.ஏ.ரஸீத், அநுராதபுரம் - மௌலவி எம்.எம்.ரம்லான், மொனராகலை - மௌலவி எம்.டப்ளியு.சல்சபீல், கண்டி - எம்.ஏ.எம்.சியாம், பதுளை - எம்.கே.எம்.நியார், மட்டக்களப்பு - பளீலுல் ரஹ்மான், இரத்தினபுரி - எம்.எஸ்.எம்.நசீர், கேகாலை - ஆதில் அலி சப்ரி, வட பிராந்தியம் - ஏ.எஸ்.எம்.ஜாவித், ஏ.ஏ.எம்.மிஸ்பாஹ், காலி - ஏ.சி.எம்.ஸபீக், மாத்தறை - எம்.மிப்ராஹ், ஹம்பாந்தோட்டை - இர்பான் ஸகரியா, நுவரெலியா - எஸ்.எம்.எம்.ரமலி, மாத்தளை - எம்.நஜிமுதீன், திருகோணமலை - ஏ.எஸ்.யாசின் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 25 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இணைப்பாளர்கள் அனைவரும் அடுத்த செயற்குழு தெரிவாகும்வரை செயற்படுவார்கள்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வயர் ஒன்றினால் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் ஆணொருவர் சடலமாக மீட்பு

(மீராவோடை நிருபர்)

மீராவோடை வீடொன்றில் தனிமையிலிருந்த நபரொருவர் நேற்று (11) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - மீராவோடை ஹமீட் சேர்மன் வீதியிலுள்ள வீடொன்றில் இருந்தே இவ்வாறு சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வயர் ஒன்றினால் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில், 55 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடும்பத்தினர் வெளியூர் ஒன்றுக்கு பயணம் சென்ற நிலையில், வீட்டில் தனிமையில் இருந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வந்தாறுமூலை மாருதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வு









(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு, வந்தாறுமூலை மாருதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வு வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் மாருதி பாலர் பாடசாலையின் தலைமை ஆசிரியருமான திருமதி சரோஜினி மகேஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அதிதிகள் மலர்மாலை அணிவித்து, வாத்தியங்கள் இசைக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

நிகழ்வில் கௌரவ அதிதிகளாக ஓய்வுபெற்ற அதிபர் ப.கந்தசாமி கிராம சேவை உத்தியோகத்தர் அ.விஜயகுமார், லண்டன் மாநகரத்திலிருந்து கருணாநிதி, பாடசாலைகளின் அதிபர்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

இந்நிகழ்வில் மாணவர்களின் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்று வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# இனவாத சுவர்களை உடைத்து முன்னேறிய தன்னெழுச்சி வெற்றியானது மக்களின் ஒற்றுமைக்கு கிடைத்த பரிசு

## கல்முனை மாநகர சபை உறுப்பினர் பைறூஸ்



(மாளிகைக்காடு நிருபர்)

கஷ்டங்கள் நீங்கி தினம் நல்லன நடக்கும் நாடொன்றை நோக்கி மக்கள் அலைகடலாக அணிதிரண்டிருப்பது இலங்கை அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, உலக அரசியலுக்கே ஒரு செய்தியை கூறியிருக்கும் சம்பவமே. மக்கள் தன் எழுச்சி வெற்றியை நோக்கி நகர்வது மகிழ்ச்சியளிக்கிறது. கடந்த 09ஆம் திகதிய சம்பவத்தின் மூலம் பொறுமை காத்து அடங்கியிருக்கும் மக்கள் பொறுமையிழந்து வீதிக்கு இறங்கினால் என்ன நடக்கும் என்பதை மக்களை பலியிட நினைக்கும் எல்லோருக்கும் அறியவைத்துள்ளது - என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலான கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம். பைறூஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், தொடர்ந்தும் கூறுகையில் மக்கள் சுதந்திரமாக சுவாசிப்பதற்கும் கூட இன்று வரிசையில் நிற்கவேண்டிய அவலநிலை இலங்கையில் இருக்கிறது. ஊழல், அதிகார துஷ்பிரயோகங்கள் காரணமாக சீரழிக்கப்பட்ட வளமிக்க இலங்கை தாய்நாட்டை மீட்க அரசியல்வாதிகளினால் கட்டமைக்கப்பட்ட இனவாத, பிரதேசவாத தடை சுவர்களை உடைத்துக்கொண்டு இனவாத அரசுக்கு எதிராக கொழும்பு உட்பட முக்கிய இடங்களை முடக்கியிருப்பது இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய வரலாற்று திருப்பமாக உள்ளது.

இப்பணியை சிறப்பாக முன்னெடுக்க இரவுபகலாக அரசின் பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியிலும், கஷ்டங்களுக்கு மத்தியிலும் இரண்டு மாதங்களுக்கு மேலாக வீதியில் அமர்ந்திருந்து போராடிய நாளைய தலைவர்களான இளைஞர்கள், தாய்நாட்டை நேசித்த இலங்கையர்கள், மதபோதகர்கள், சமூக அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், ஊடக நண்பர்கள் உட்பட அவர்களுக்கு உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய அரசியல் பிரமுகர்கள் எல்லோருக்கும் தாய்நாட்டை நேசிக்கும் இலங்கையனாக என்னுடைய நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களின் நேற்றைய தன்னெழுச்சி வெற்றியானது ஒற்றுமைக்கு கிடைத்த பரிசாக நோக்குகிறேன். ஊழலற்ற, மக்களை நேசிக்கும் அரசாங்கம் அமைய புனித ஹஜ்ஜுப்பெருநாள் தினமாகிய இன்று பிராத்திக்கிறேன் - என்று தெரிவித்தார்.





கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக நிந்தவூர் அட்டப்பள்ளம் ஐ.ஓ.சீ. எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பிரதான வீதியில் எரிபொருள் நிரப்பிக்கொள்வதற்காக மோட்டார்சைக்கிள்கள் ஓலைகளினால் மூடி வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். (படம்- கோணாவத்தை நிருபர்)

# கொக்கட்டிச்சோலை முனைக்காடு பகுதியில் குடும்பஸ்தரொருவர் தூக்கிட்டுத் தற்கொலை

(மண்முனை நிருபர்)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முனைக்காடு பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நிலையில், நேற்று (11) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான (வயது 47) கோபாலபிள்ளை புவனேசசிங்கம் என்பவரே தனது வீட்டின் அறையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் (10) வீட்டில் மனைவியுடன் தகராறு ஏற்பட்டதாகவும், பின்னர் தனது வீட்டு வளாகத்திலுள்ள மற்றுமொரு குடிசை வீட்டுக்குச் சென்றவர் அங்கு தூக்கிட்டுத் தற்கொலை செய்த நிலையில் சடலமாக காணப்பட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் பீற்றர்போலின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் பிரேதத்தை கையளிக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 77 பேர் மட்டக்களப்பு களுவன்கேணியில் கைது

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பு, களுவங்கேணி கடற்கரையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு இயந்திர படகில் சட்டவிரோதமாக பயணித்த 77 பேரை நேற்று (11) அதிகாலை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

இதில் பெண் ஒருவர் உட்பட 17 பேரை ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன், ஏனைய 60 பேரை படகுடன் திருகோணமலை கடற்படை முகாமிற்கு கொண்டுசென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய சம்பவதினமான நேற்று அதிகாலை 2 மணியளவில் மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கடல்பகுதியில் பயணித்த இயந்திரப்படகை கடற்படையினரின் படகுகள் சுற்றிவளைத்து கைப்பற்றின. இதில் சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் 60 பேரை கைதுசெய்ததுடன், குறித்த சட்டவிரோத படகில் ஏறுவதற்கு களுவங்கேணி கடற்கரையில் வான் ஒன்றில் காத்திருந்த 17 பேரையும் கடற்படை புலனாய்வுப் பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து சுற்றிவளைத்து கைதுசெய்ததையடுத்து 77 பேரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட 60 பேரையும் படகையும் திருகோணமலை கடற்படை முகாமிற்கு கொண்டுசென்றுள்ளதுடன், களுவங்கேணி கடற்கரையில் கைதுசெய்யப்பட்ட பெண் ஒருவர் உட்பட 17 பேரையும் 14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் வேன் ஒன்றையும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்வர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டு. அரசடித்தீவு முத்துமாரியம்மன் ஆலயத்தில் முத்தமிழ் சங்கமம் - 2022

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு அரசடித்தீவு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய உற்சவத்தின் இறுதிநாள் சடங்கை சிறப்பிக்கும் முகமாகவும், இளங்கதிர் கலாமன்றத்தின் 47ஆவது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் முகமாகவும் முத்தமிழ் சங்கமம் - 2022 நிகழ்வு இன்று (12) முத்துமாரியம்மன் ஆலய அரங்கில் இரவு 9.30 மணிக்கு அரங்கேறவுள்ளது.

இந்நிகழ்வு இளங்கதிர் கலாமன்றத் தலைவர் ரி.பேரின்பராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. மேற்படி நிகழ்வு சிறப்புற அமைய இப்பிரதேச பொதுமக்களை வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## போடியார் புலம்பல்!



அடுத்த ஜனாதிபதி..அடுத்த பிரதமர்.. யார் என்பதற்கு பலர் ஓடுகிறார்கள்.. உண்மையில் நாளைக்கு கோட்டா விலகுவதாக சொல்லுறாங்க எலுவா? ஆனா அந்த மனிசன் ஒரு வேள விலகாமலும் உட்டாலும் உடுவார். ஏன் தெரியுமா? அவருக்கோ அந்த குடும்பத்துக்கோ ரோச நரம்பு இல்லையே.. தம்பி சஜீத்துக்கு பிரதமர் பதவிக்கு பலர் ஆப்பு வைப்பாங்க. எண்டது மட்டும் உண்ம..!

# உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய முள்ளிப்பொத்தானையில் மரவள்ளி செய்கை

(கிண்ணியா நிருபர்)



துரித பயிர்ச்செய்கை திட்டத்தின் கீழ் மரவள்ளி, இராசவள்ளி கிழங்கு நடும் நிகழ்வு முள்ளிப்பொத்தானை வடக்கு கிராமசேவகர் பிரிவில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையின் கீழ் நேற்று (11) இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சபீரின் வீட்டுத் தோட்டத்தில் இச் செய்கைக்கான மரவள்ளி தடி நடும் நிகழ்வு இடம்பெற்றது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உணவுப் பற்றாக்குறைக்கு முகங்கொடுக்கும் வகையில் இவ்வாறான திட்டம் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு மட்டம் என ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

சமுர்த்தி பயனாளிகள் உள்ளிட்ட பலரும் இதனை திறம்பட செய்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். இதில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் சித்திக் மற்றும் கிராம அதிகாரி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கிண்ணியா சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணிப்பகிஷ்கரிப்பு





(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்று (11) காலை 9.00 மணிமுதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தமது சேவையை அத்தியாவசிய சேவைக்குள் உள்வாங்கப்படாததனாலும், எரிபொருள் பற்றாக்குறையினாலும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சூரங்கல், குறிஞ்சாக்கேணி, கிண்ணியா ஆகிய மூன்று சமூர்த்தி வங்கி உத்தியோகத்தர்களும் அங்கு பணிபுரியும் வெளிக்கள உத்தியோகத்தர்களுமே இவ்வாறு பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

மூன்று வங்கிகளும் மூடப்பட்டிருந்தன. இதனால் சமுர்த்தி வங்கிகள் வெறிச்சோடி கிடந்தன.

சமுர்த்தி வங்கி மூலம் சேவை பெற வந்தவர்கள் பெற முடியாது திரும்பிச் சென்றனர்.

தங்களுக்கான எரிபொருள் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத் தருமாறும் இதன்போது தெரிவித்தனர். உலக வங்கி ஊடாக பொது மக்களுக்கான 5,000 ரூபா விசேட கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் தங்களது கடமைகளை முன்னெடுப்பதில் போக்குவரத்துத்துறையில் சிக்கல் நிலவுகிறது பெற்றோல் இன்மை காரணமாக தூர வெளிப் பிரதேசத்துக்கு களத்துக்கு செல்ல முடியாது. பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அதிகாரிகள் ஆகியோர் அத்தியாவசிய சேவையென தெரிவிக்கப்பட்ட நிலையில், தங்களது சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் அத்தியாவசிய சேவைக்குள் உள்வாங்கி பெற்றோலை பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை அல்-பஹ்ரியா பாடசாலை மாணவர்கள் மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டிக்குத் தெரிவு!





(கல்முனை நிருபர்)

கல்முனை வலய பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டி இம்மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

குறித்த மெய்வல்லுனர் போட்டியில் கல்முனை வலயத்திலுள்ள 5 கோட்டங்களைச் சேர்ந்த சுமார் 30 பாடசாலைகள் போட்டியில் கலந்துகொண்டனர்.

இதில் கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை மாணவ, மாணவிகள் 5 முதல் இடங்களையும் 9 இரண்டாம் இடங்களையும் 4 மூன்றாம் இடங்களையும் பெற்று மாகாண மெய்வல்லுனர் போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

இவ் வெற்றியானது அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை வரலாற்றில் அதிகூடிய போட்டி நிகழ்ச்சிகளில் மாகாண மட்ட போட்டியில் மாணவ மாணவிகள் பங்குபற்றுவது இதுவே முதல் முறையாகும்.

இந்த வீர, வீராங்கனைகளுக்கு பயிற்றுவித்த எம்.ஏ.எம்.றியால், யூ.எல்.எம்.சிபான், ஏ.டபிள்யூ.எம்.ஆசாத்கான் ஆகியோருக்கு பாடசாலை அதிபர்.எம்.எஸ்.எம்.பைசால் மற்றும் பிரதி அதிபர்கள், ஆசிரிய ஆசிரியைகள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கம், நலன்விரும்பிகள் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கும் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றனர்.

# சாய்ந்தமருதில் ஹஜ்ஜுப் பெருநாள் நபிவழி திடல் தொழுகை





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் நபிவழி திடல் தொழுகை சாய்ந்தமருது -12 கடற்கரைத் திடலில் நேற்று முன்தினம் (10) ஞாயிற்றுக்கிழமை காலை சிறப்பான முறையில் நடைபெற்றது.

இப்பெருநாள் தொழுகை மற்றும் குத்பா உரையினை மௌலவி எம்.எஸ்.எம். ஸலபி நடத்தியதோடு, குறித்த திடல் தொழுகையினை நிறைவேற்றுவதற்காக சாய்ந்தமருது பிரதேசத்திலிருந்து ஏராளமான ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் மிகவும் ஆர்வத்தோடு, கலந்துகொண்டதை காணக்கூடியதாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.



வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம முருகன் ஆலய மகோற்சவத்தினை முன்னிட்டு கதிர்காமத்திற்கு செல்லும் புனித பாதயாத்திரை முருக பக்தர்கள் யாழ். செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து அரோகரா கோஷங்களுடன் ஆரம்பித்து வீதி வழியாக நடைபவனியில் ஊர்வலமாக அம்பாறை மாவட்ட காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு நேற்று முன்தினம் (10) மாலை சென்றடைந்து அங்கு வழிபாடுகளில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.
(படங்கள் - காரைதீவு நிருபர்)

# மோட்டார்சைக்கிள் விபத்தில் திருமலையில் ஒருவர் மரணம்

(அப்துல்சலாம் யாசிம்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கன்னியா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில், மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (10) மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் திருகோணமலை - அன்புவழிபுரம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் உயிரிழந்துள்ளதாகவும், 33 வயதுடையவர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கன்னியா பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கி மோட்டார்சைக்கிளில் இருவரும் வந்துகொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதகுடன் மோதி விபத்துக்குள்ளானதாகவும் தெரியவருகிறது.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த நபர் தற்போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றார். விபத்து தொடர்பிலான விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மகிழூர் குளக்கட்டு அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன் தீ மிதிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டம் மகிழூர் அருள்மிகு குளக்கட்டு அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு பெருவிழாவின் தீ மிதிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் (10) இரவு மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

ஆலயத்தின் இவ்வருடத்திற்கான சடங்கு கந்த 2022.07.06 ஆம் திகதி ஆரம்பமாமாகியது. தொடர்ச்சியாக 8 நாட்கள் சடங்கு நடைபெற்று எதிர்வரும் 2022.07.13ஆம் திகதி திருக்குளிர்த்தியுடன் நிறைவு பெறவுள்ளது.

இதனிடையே ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ ஆலய முன்றலில் அமைந்துள்ள தீக்குளியில் ஞாயிற்றுக்கிழமை காலையில் தீ மூட்டப்பட்டு அன்றையதினம் இரவு மிகவும் பக்திமயமான முறையில் பக்தர்கள் தீ பாய்ந்தனர்.

ஆலய சடங்குகள் யாவும் ஆலய சடங்கு கால பிரதம குரு சிவஸ்ரீ நே.விஜியகுமார குருக்கள் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

# இலங்கைக்கு இந்திய ஆதரவு எப்போதும் உண்டு

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு



''இலங்கையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி ஒரு 'தீவிரமான' விவகாரம். இந்திய அரசு இலங்கைக்கு தேவையான உதவிகளை செய்யத் தயாராகவுள்ளது. அண்டைநாடான இலங்கை பாதிப்புக்குள்ளாகும் போதெல்லாம் இந்தியா அக்கறையுடன் செயற்படும்'' - என இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

''இப்போது இலங்கை மக்கள் தங்களின் சொந்தப் பிரச்சினைகளை தீர்க்க முற்பட்டுள்ளார்கள். எனவே, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். தற்போதைக்கு இலங்கை அகதிகள் நெருக்கடி எதுவும் இந்தியாவுக்கு கிடையாது. இந்த ஆண்டு மட்டும் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு, 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க மத்திய அரசு உறுதியளித்திருக்கிறது'' - என்றார்.

இதேவேளை, ''இலங்கைக்கு இந்திய ஆதரவு எப்போதும் உண்டு'' - இவ்வாறு இந்திய வெளியுறவுச் செயலர் அரிந்தம் பாக்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''இலங்கை அரசும் அந்நாட்டு மக்களும் எதிர்கொண்டுள்ள பல்வேறு சவால்கள் பற்றியும் நாம் அறிவோம். இலங்கை மக்கள் இந்தக் கடினமான காலத்தை கடந்துவர உதவி செய்து வருகிறோம்.

நெருங்கிய நட்பு நாடு என்ற வகையில் இலங்கைக்கு இந்தியா 3.8 பில்லியன் டொலர் மதிப்பிலான உதவிகளைச் செய்துள்ளது. இலங்கையில் தற்போது நிலவும் சூழலையையும் நாங்கள் உற்றுநோக்கி வருகிறோம்.

இலங்கை மக்களின் உணர்வுகளை மதிக்கிறோம். அவர்கள் தங்கள் வளத்தை மீட்டெடுக்க, முன்னேற்றத்தை உறுதிசெய்ய போராடுகின்றனர். மக்கள் முன்னெடுக்கும் ஜனநாயக முறையிலான போராட்டங்களை மட்டும் நாங்கள் ஆதரிக்கிறோம்'' என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மக்கள் முன்னெடுத்த மிகப்பெரிய போராட்டத்தின் விளைவாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவதாக அறிவித்தார். நாடே திரண்டு வந்ததுபோல் தலைநகர் கொழும்பில் ஜனாதிபதி மாளிகையை நோக்கி மக்கள் படையெடுக்க பொலிஸும் இராணுவமும் செய்வதறியாது திகைத்தது. அதன் விளைவு பொதுமக்கள் ஜனாதிபதி மாளிகையை தம் வசப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நாளை (13ஆம் திகதி) ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்வதாக கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். அதுபோல் அனைத்துக் கட்சி ஆட்சியமைப்பு சாத்தியப்பட்டவுடன் பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதாக ரணில் விக்ரமசிங்கவும் அறிவித்துள்ளார்.

இருப்பினும், அங்கு தொடர்ந்து போராட்டங்கள் நடந்தவண்ணம் உள்ளன. இந்நிலையில், இந்தியா, இலங்கைக்கும், அந்நாட்டு மக்களுக்கும் ஆதரவுக்கரம் நீட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.



தாஜ்மஹால் முன்றலில் இடம்பெற்ற ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை..

## 10 மாதங்கள்; 25 நாட்கள்; 6,500 கி.மீ. நடைபயணம் மக்காவை சென்றடைந்த பிரித்தானிய யாத்திரிகர்



பிரித்தானியாவைச் சேர்ந்த ஒருவர், புனித ஹஜ் யாத்திரைக்காக 6,500 கிலோமீற்றர் நடைபயணம் மேற்கொண்டு மக்காவை சென்றடைந்துள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பிரித்தானியாவின் வால்வர்ஹாம்ப்டனிலிருந்து மக்காவுக்கு புனித யாத்திரையை ஆரம்பித்த ஆடம் என்பவர், நெதர்லாந்து, ஜேர்மனி உள்ளிட்ட 10 நாடுகளை 10 மாதங்கள் 25 நாட்களில் கடந்து தற்போது மக்காவை சென்றடைந்துள்ளார்.

அமைதி மற்றும் சமத்துவத்தை வலியுறுத்தி, இந்த நடைபயணத்தை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.கவிலிருந்து ஓ.பன்னீர்செல்வத்தை நீக்கம்

## சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றம்



## ஓ.பி.எஸ். - ஈ.பி.எஸ். ஆதரவாளர்கள் மோதல்: கட்சி அலுவலகத்திற்கு சீல்; 144 தடை அமுல்

அ.தி.மு.கவிலிருந்து ஓ.பன்னீர்செல்வத்தை நீக்க பொதுக்குழுவில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கட்சியின் பொதுக்குழுவுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த பொருளாளர் ஓ. பன்னீர்செல்வத்தின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவிப்பதாகவும் பொதுக்குழுவில் பேசிய நத்தம் விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும், ஓ. பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் அனைவரையும் அ.தி.மு.கவிலிருந்து நீக்க சிறப்புத் தீர்மானம் கொண்டுவரப்படுவதாகவும் அறிவித்தார்.

கட்சி விதிகள் மற்றும் கோட்பாடுகளுக்கு எதிராக செயற்பட்ட ஓ.பன்னீர்செல்வம் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் வகையில் நத்தம் விஸ்வநாதன் கொண்டுவந்த சிறப்பு தீர்மானம் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டது.

ஓ.பன்னீர்செல்வம் தி.மு.கவுடன் நட்பு பாராட்டியது மற்றும் ஆட்சியைப் பாராட்டியது அனைத்தும் கட்சியின் விதிகளுக்கு முரணானது. பொருளாளர், அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்து பொறுப்புகளிலிருந்தும் ஓ. பன்னீர்செல்வம் நீக்கப்படுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஓ. பன்னீர்செல்வத்துடன் வைத்திலிங்கம், ஜெசிடி பிரபாகர், மனோஜ் பாண்டியன் ஆகியோரையும் அ.தி.மு.கவிலிருந்து நீக்கி சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை ராயப்பேட்டையிலுள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்திற்கு சீல் வைத்து வருவாய்த்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. பொதுக்குழு நடப்பதற்கு முன் அ.தி.மு.க. அலுவலகத்தில் எடப்பாடி பழனிசாமி, ஓ. பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் இடையே பயங்கர மோதல் வெடித்தது. அந்தப் பகுதியே கலவர பூமியாக காட்சியளித்தது. அவ்வழியே சென்ற கார்கள், பஸ்கள் அனைத்தும் சேதப்படுத்தப்பட்டன.

ஓ. பன்னீர்செல்வம் அ.தி.மு.க. அலுவலகத்தில் ஆலோசனை நடத்தும் சூழலில், அ.தி.மு.க. தலைமை அலுவலகத்திற்கு சீல்வைக்க வருவாய்த்துறை அதிகாரிகள் வருகை தந்தனர். ஓ.பி.எஸ். - ஈ.பி.எஸ். ஆதரவாளர்கள் மோதிக்கொண்டதால் பொலிஸாருடன் கோட்டாட்சியர் அ.தி.மு.க. அலுவலகம் சென்றார்.

இதனிடையே சென்னை ராயப்பேட்டையில் அ.தி.மு.க. தலைமை அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். அ.தி.மு.க. அலுவலகம் அருகே சட்டவிரோதமாக கூடக்கூடாது எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. தொடர்ந்து அ.தி.மு.க. அலுவலகத்திலிருந்து ஓபிஎஸ் வெளியேறினார். அ.தி.மு.க. தலைமை அலுவலகத்திலுள்ள அனைத்து அறைகளும் வருவாய்த்துறையினரால் பூட்டப்பட்டது. ஓ.பி.எஸ். - ஈ.பி.எஸ். ஆதரவாளர்கள் மீண்டும் மோதிக்கொள்ளலாம் என்பதால் அ.தி.மு.க. அலுவலகத்துக்கு சீல் வைக்கப்பட்டது.

இதையடுத்து, அ.தி.மு.க. கட்சி அலுவலகம் முன்பு ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. கோட்டாட்சியர் தலைமையிலான பேச்சுவார்த்தைக்குப் பிறகு சீல் அகற்றப்படும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முன்னதாக அ.தி.மு.க. அலுவலக கதவை உடைத்துக்கொண்டு ஓபிஎஸ் ஆதரவாளர்கள் உள்ளே சென்றனர். எடப்பாடி பழனிசாமி, அ.தி.மு.க. பொதுச் செயலாளராக தெரிவான சில மணிநேரத்தில் கட்சி அலுவலகத்திற்கு சீல் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இன்று 139ஆவது நாளை எட்டிய போர்:

# உக்ரைன் மீது ரஷ்யா வான்தாக்குதல்: 18 பேர் உயிரிழப்பு; 24 பேர் காயம்!

## உலக செய்திகள்







உக்ரைன் மீது நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 24 மணிநேரத்துள் 34 வான்தாக்குதல்களை ரஷ்யா நடத்தியுள்ளது.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இப்போர் இன்று 139ஆவது நாளாகவும் தொடர்ந்தும் நடைபெற்றுவருகிறது. போரால் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரமான கார்கீவ், துறைமுக நகரமான மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளன. அத்துடன், உக்ரைனில் போர் தொடங்கியதுமுதல் இதுவரை 87 இலட்சம் பேர் நாட்டைவிட்டு வெளியேறி அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உக்ரைனின் டொனெட்ஸ்க் பகுதியிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பின் மீது ரஷ்யப் படைகள் நடத்திய வான் தாக்குதலில், இடிபாடுகளில் சிக்கி 18 பேர் உயிரிழந்தனர்.

சாசிவ் யார் பகுதியில் ரொக்கெட்டுகள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில், குடியிருப்புக் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து தரைமட்டமானது.

உருக்குலைந்த கட்டடத்தின் இடிபாடுகளில் 24இற்கும் மேற்பட்டோர் சிக்கியுள்ள நிலையில், அவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறன.

**24 மணிநேரத்துள் 34 வான்தாக்குதல்கள்**

இந்நிலையில், உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கீவ்வில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், 22 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

# ஈழத் தமிழர்களுக்கு சம உரிமை வழங்கப்படவேண்டும்

## பழ.நெடுமாறன் வலியுறுத்து



ஈழத் தமிழர்களுக்கு சம உரிமை அளிக்கவும் அவர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளவும் சிங்கள மக்கள் முன்வர வேண்டும் - என்று தமிழர் தேசிய முன்னணித் தலைவர் பழ.நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சிங்கள மக்களின் புரட்சியின் விளைவாக ராஜபக்ஷ சகோதரர்கள் பதவியை விட்டு விலகியது மட்டுமல்ல, நாட்டை விட்டு ஓடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இனவெறியை மட்டுமே கோட்பாடாகக் கொண்டு செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் கதி இதுதான் என்பது வரலாற்றில் மீண்டும் பதிவாகியுள்ளது.

மக்கள் புரட்சியை ஒடுக்க சிங்கள இராணுவம் முன்வரவில்லை என்பது சிந்திக்கத்தக்கதாகும். சிங்கள இராணுவத்தில் முக்கிய பொறுப்புகளை வகித்தவர்கள் ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டவர்களே. அப்படி இருந்தும் இராணுவம் சும்மா இருந்தது ஏன்? ராஜபக்ஷக்களின் தந்திரமா? என்ற கேள்வி எழாமல் இல்லை. இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதற்குப் பின்னணியில் சீனா இருக்கக்கூடும் என்பதை புறக்கணித்து ஒதுக்க முடியவில்லை.

எதுவாக இருந்தாலும் சிங்கள மக்கள் இனவெறியைக் கைவிட்டுவிட்டு ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குப் பரிகாரம் காண முன்வர வேண்டும். அவர்களுக்குச் சம உரிமை அளிக்கவும் அவர்களின் உணர்வுகளை மதிக்கவும் முன்வர வேண்டும்'' - இவ்வாறு அந்த அறிக்கையில் பழ.நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.

## 1 தங்கம் - 2 வெண்கலப் பதக்கங்கள்: தூள் கிளப்பிய 94 வயது இந்தியப் பாட்டி



பின்லாந்தின் தாம்பரே நகரில் நடைபெற்ற உலக மாஸ்டர்ஸ் தடகள சேம்பியன் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த 94 வயது பகவானிதேவி என்ற மூதாட்டி தங்கப்பதக்கம் வென்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

100 மீற்றர் ஓட்டபந்தயத்தில் அவர் பந்தய தூரத்தை 24.74 விநாடிகளில் கடந்து வெற்றிபெற்றார். மேலும் குண்டு எறிதல் உள்ளிட்ட போட்டிகளிலும் அவர் இரண்டு வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளார்.

94 வயதிலும் உலகப் போட்டியில் பங்கேற்று பதக்கங்களை வென்றுள்ள அவருக்கு பாராட்டுகள் குவிந்துள்ளன.



மாலை மாற்றி தாலிக் கட்டி திருமணப்பந்தத்தில் இணைந்துகொண்ட ஒரேபாலின கார்த்திக் - கிருஸ்ணா தம்பதிகள். (இந்தியா)

# நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை அவசியம்

## இலங்கை ஆயர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை

(நமது நிருபர்)

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இலங்கை ஆயர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும், எரிபொருள், எரிவாயுவை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கிறார்கள். மின்சார துண்டிப்பும் நாளாந்தம் இடம்பெறுகிறது. இதனால் ஏழை மக்கள் பட்டினியால் வாழ்கிறார்கள் என அச்சங்கம் தெரிவித்துள்ளது.

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் மக்கள் தவிப்பதாக இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் ஹெரல்ட் என்டனி பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் உட்பட 15 ஆயர்கள் கையொப்பமிட்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி மக்களை அநியாயமாக துன்புறுத்தியுள்ளது. இந்த நெருக்கடிக்குக் காரணமானவர்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

நிலைமைகளை தினமும் கண்காணித்து விரைவான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் ஒழுங்கமைக்கப்பட்ட பொறிமுறை எதுவும் கிடையாது. இவ்வாறான தோல்வியான சூழ்நிலையானது தீவிர மாற்றத்துக்கான தேவைக்காக மக்களை எழுச்சிபெற நிர்ப்பந்தித்துள்ளது.

அரசாங்கத்தின் தவறான முகாமைத்துவம் காரணமாகவே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நீதி, சமத்துவம் ஆகியவற்றை நிலைநாட்டி எதிர்கால சந்ததியினர் சுபீட்சத்துடன் வாழ்வதற்கான வழியை ஏற்படுத்துவதற்கும் காத்திரமான திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும். வன்முறைகளிலிருந்து விலகியிருக்குமாறு நாம் கேட்டுக்கொள்வதுடன், அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள கருத்து மற்றும சுதந்திரமான ஜனநாயக செயற்பாட்டுக்கான உரிமையை அரசாங்கம் மதிக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த அரசாங்கம் நாட்டு மக்களை பிச்சைக்காரர்களாக மாற்றியுள்ளது என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




நாட்டில் தற்போது நிலவும் அரசியல் கள நிலைவரம் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர்களான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, அதன் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் ஆகியோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் அவரையும், கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரையும் நேற்று முன்தினம் (10) சந்தித்து, அவசர கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

# ஜனாதிபதி செயலக வளாகத்துக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்வதை தடுக்கவே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது

## இராணுவம் விளக்கம்

கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகை வளாகத்திற்குள் கடந்த சனிக்கிழமை (9) பிற்பகல் ஆர்ப்பாட்டக்காரர்கள் பலவந்தமாக நுழைய முற்பட்டபோது, அவர்களுக்கு வேண்டுமென்றே தீங்கு விளைவிக்கும் வகையில் இராணுவப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறும் சில காணொளிகள் பரவி வருகின்றன.

இதுதொடர்பில் தற்போது இராணுவப் பிரிவு கவனம் செலுத்தியுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதை இராணுவம் திட்டவட்டமாக மறுக்கிறது.

ஆனால், எதிர்ப்பாளர்கள் வளாகத்திற்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கில், ஜனாதிபதி செயலக வளாகத்தின் பிரதான நுழைவாயிலின் பக்கவாட்டு தடுப்புச் சுவர்கள் மற்றும் வானை நோக்கியே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருந்தது.

வான் மற்றும் பக்கச்சுவர்களில் துப்பாக்கிச் சூடு நடத்துவதால், பணியில் இருந்த அந்த இராணுவ வீரர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வேண்டுமென்றே தீங்கு விளைவிப்பதை நோக்கமாகக்கொண்டிருந்தனர் என்று அர்த்தப்படமாட்டாது.

# தொடர்ந்தும் மோசமாக மீறப்படும் ஊடக சுதந்திரம்

## வவுனியா ஊடக அமையம் கண்டனம்

(வவுனியா நிருபர்)

வவுனியா ஊடக அமையம்
VAVUNIYA PRESS CLUB
වවුනියා මාධ්‍ය සමාජය
e.mail : vavuniyapressclub@gmail.com
fb : Press Club Vavuniya
No: 208, Station Road, Vairavapuliyankulam, Vavuniya.
Tel :024-2222190

இலங்கையில் தொடர்ந்தும் ஊடக சுதந்திரம் மோசமாக மீறப்பட்டு வருகின்றது என்பதை கொழும்பில் செய்தி சேகரித்துக்கொண்டிருந்த நான்கு ஊடகவியலாளர்கள் மீது பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் வெளிப்படுத்தியுள்ளது என வவுனியா ஊடக அமையம் தெரிவித்துள்ளது.

சக்தி மற்றும் சிரச ஊடக வலையமைப்பின் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் வவுனியா ஊடக அமையம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து மக்கள் தன்னெழுச்சியாக கோட்டா அரசாங்கத்திற்கு எதிராக போராடி வருகின்றனர். அதன் ஒரு கட்டமாக கடந்த சனிக்கிழமை (09) ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, பிரதமரின் வீடு என்பன மக்களால் முற்றுகையிடப்பட்டது.

குறித்த சம்பவத்தின்போது ஜனநாயகத்தின் நான்காவது தூணாக களத்தில் நின்று மக்களுக்கு உண்மை நிலையை வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் மீது மிலேச்சத்தனமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஏற்றுக்கொள்ள முடியாது. சக்தி, சிரச ஊடக வலையமைப்பின் ஊடகவியலாளர் நால்வரும் தாம் ஊடகவியலாளர் என வெளிப்படுத்திய பின்னரும், பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் இணைந்து காட்டுமிராண்டித்தனமாக தாக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

யுத்த காலத்திலும் யுத்தத்திற்கு பின்னரும் இந்த நாட்டில் கருத்து சுதந்திரத்திற்கு இடமளிக்காது ஆட்சியாளர்கள், ஆயுத முனையில் அதனை அடக்கி ஆழ முற்பட்டு வருகின்றனர். யுத்தம் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஊடக அடக்கு முறை என்பது தொடர்கின்றது என்பதை இச்சம்பவம் புடம் போட்டுக் காட்டுகின்றது.

தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் விரைவில் நலன்பெற இறைவனை வேண்டுகின்றோம். அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பில் உடனடியாக நீதியான விசாரணைகள் இடம்பெற வேண்டும் என வவுனியா ஊடக அமையம் கோருவதுடன், சம்பந்தப்பட்ட பாதுகாப்புத் தரப்பினர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட நான்கு ஊடகவியலாளர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என வவுனியா ஊடக அமையம் வலியுறுத்துகிறது.

மேலும், இலங்கையில் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டமை - கொல்லப்பட்டமை தொடர்பிலும் நீதியான ஒரு விசாரணை இடம்பெற வேண்டும். அதற்கு சர்வதேச சமூகமும், ஒட்டுமொத்த ஊடக அமைப்புகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படும் இடத்தில் மட்டுமே இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாமையை உறுப்படுத்த முடியும் என்பதுடன், ஜனநாயகத்தின் நான்காவது தூணாகிய ஊடக சுதந்திரமும் பாதுக்காக்கப்படும் என ஊடக அமையம் நம்புகின்றது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எமது மக்களுக்கு சொந்தமான கடல் வளத்தை அந்நிய தேசங்களுக்கு விற்க அனுமதியோம்

## மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாச செயலாளர் ஆலம் தெரிவிப்பு

(மன்னார் நகர் நிருபர்)



இந்திய மீனவர்களின் வருகை என்பது பல வருடங்களாக பேசப்பட்டு வருகின்றது. தற்போது இலங்கையில் இருக்கும் பொருளாதார நெருக்கடி நிலையை பயன்படுத்தி எமது கரையோரங்களிலுள்ள வளங்களை கூட சூறையாடி செல்கிறார்கள். இது தொடர்பாக ஏற்கனவே நாங்கள் முறையிட்டும் தான்தோன்றித்தனமாக செயல்பட்டு நீண்ட காலமாக எமது கோரிக்கையை அவர்கள் செவிமடுப்பதாக தெரியவில்லை - என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாச செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று (11) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் இன்றைய தினம் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை முன்வைக்கின்றோம். தயவு செய்து எமது வளங்களை எமது மக்களுக்காக விட்டு வையுங்கள். எமது வளங்களை நீங்கள் அள்ளிச்செல்வதால் எமது மக்கள் மீண்டும் மீண்டும் பட்டினிச்சாவை எதிர்கொள்கிறார்கள்.

வடபகுதியில் குறிப்பாக, மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எரிபொருள் அற்ற நிலையில் மாதக்கணக்காக மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். இதனால் கடலில் போடப்பட்டுள்ள அவர்களுடைய வலைகளை கூட கரைக்கு கொண்டுவர முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

மேலும் வடக்கின் பல பகுதிகள் அந்நிய தேசத்தவர்களுக்கு விற்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அவை மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். மீனவ சமுதாயத்தின் மீன்பிடி பிரச்சினை தொடர்பான சம்பவங்களை கையாளும்போது அவர்களின் ஆலோசனைகளை கேட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் இங்குள்ள அரசியல் தலைமைத்துவங்கள் இந்த நாட்டு மக்களுக்கு சொந்தமான வளங்களை அந்நிய நாட்டிற்கு விற்பதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் . அவ்வாறு ஒரு நிலை வருமாக இருந்தால் இலங்கை தேசத்தில் தற்போது ஒரு சம்பவம் நடந்ததுபோன்று வடமாகாணத்தில் இவ்வாறு ஒரு சூழ்நிலை உருவாகும் என்று இந்த நேரத்தில் எச்சரிக்கை விடுக்கின்றோம் - என்றார்.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாச தலைவர் ஜஸ்ரின் சொய்சா, வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பொருளாளர் அன்ரனி சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகளை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர்களை தாக்கிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணி நீக்கம்

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் பிரத்தியேக இல்லத்துக்கு அருகில் கடந்த 09ஆம் திகதி இடம்பெற்ற குழப்ப நிலை தொடர்பில் செய்தி அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரெமேஷ் லியனகே உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபருக்கு நிறுவன சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங் களுக்கு அமைவாகவும், பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டும் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் இந்தப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

விசேட அதிரடிப்படையின் பிரதமர் பாதுகாப்புப் பிரிவு பணிப்பாளராக அவர் கடமையாற்றியுள்ளார்.

# எரிவாயு விநியோகம் இன்றுமுதல் ஆரம்பம்

நாட்டுக்குத் தேவையான எரிவாயு விநியோகம், இன்று (12) முதல் முறையாகவும் சீராகவும் இடம்பெறுமென ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டுக்கு மேலும் 3700 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நேற்று முன்தினம்(10) நாட்டை வந்தடைந்தது. குறித்த கப்பல் கெரவலப்பிட்டியவை சென்றடைந்தவுடன், எரிவாயுவை இறக்கும் பணிகளை உடனடியாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாளைய தினம் 3,740 மெட்ரிக் தொன் எரிவாயு அடங்கிய இரண்டாவது கப்பல் வருகை தரவுள்ளது.

அத்துடன் 3,200 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய மூன்றாவது கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# இலங்கையை தேசிய முன்னுரிமை வழங்கும் நிகழ்ச்சி நிரலைக்கொண்ட நாடாக மாற்றுங்கள்

## கூட்டு ஆடைகள் சங்க மன்றம் கோரிக்கை

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தமது பதவிகளை இராஜினாமா செய்யவேண்டும் என்றும், அனைத்துக் கட்சிகளின் பங்களிப்புடன் கூடிய சர்வகட்சி அரசாங்கத்தை விரைவில் உருவாக்குவதற்கும் தேர்தலை நடத்துவதற்கும் வழிசெய்ய வேண்டுமெனவும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை அனைத்துக் கட்சித் தலைவர்களும் அமுல்படுத்துமாறும் கூட்டு ஆடைகள் சங்க மன்றம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்யும் அரசியல் முறைமை சீர்திருத்தம் குறித்த வேண்டுகோள் தொடர்பிலும் அந்த மன்றம் மீண்டும் இதன்போது கவனம் செலுத்தியுள்ளது.

“இலங்கையின் வரலாற்றில் மிகவும் சவாலான மற்றும் நெருக்கடியான இந்த சூழ்நிலையில், நமது நாடு எதிர்கொண்டுள்ள இந்த துயரமான நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், இலங்கையை கட்டியெழுப்புவதற்கும் நிகழ்ச்சி நிரலை உருவாக்குவதற்கும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்றிணைந்து செயல்படுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

"இந்த நேரத்தில் மக்கள் எதிர்கொள்ளும் கஷ்டமான சூழ்நிலையை நாங்கள் முழுமையாக புரிந்துகொள்வதுடன், தங்கள் போராட்டங்களை வன்முறையின்றி நடத்தவும், பொறுமையுடனும் உறுதியுடனும் செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் சட்டம் ஒழுங்கை பேணி பாதுகாப்பதுடன், மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயற்படுமாறு பாதுகாப்புப் படையினரைக் கேட்டுக் கொள்கின்றோம்.” என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் தொடர்பில்,

கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் என்பது இலங்கையின் ஆடைகளை உலகின் முதல் தர ஆடை விநியோக இடமாக மாற்றும் இறுதி இலக்கை நோக்கி உந்தப்பட்ட ஒரு முன்னணி அமைப்பாகும். JAAF ஆனது விநியோக சங்கிலி பங்குதாரர்கள், ஏற்றுமதி சார்ந்த ஆடை உற்பத்தியாளர்கள், கொள்வனவு நிலையங்கள் மற்றும் இலங்கையில் உள்ள சர்வதேச வர்த்தக நாமங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய 5 சங்கங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது)

# ஜூலை 09 கலவரச் சம்பவங்களுக்கு சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனம்

ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
BAR ASSOCIATION OF SRI LANKA
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

நாட்டில் கடந்த சனிக்கிழமை (09ஆம் திகதி) இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் நேற்று முன்தினம் (10) கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அந்தச் சங்கத்தின் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்..

இதேவேளை, அரசியலமைப்புக்கமைவாக ஜனாதிபதி தனது இராஜினாமா தீர்மானம் குறித்து சபாநாயகருக்கு ஜனாதிபதியினால் கையொப்பமிட்ட கடிதத்தை அனுப்ப வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதன் போது தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

போராட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் சிலருக்கு பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதேபோன்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்தின் மீது தீ வைக்கப்பட்ட சம்பவத்தையும் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும்போது பிரதமர் பதில் ஜனாதிபதியாக பதவியேற்க அரசியலமைப்பு அனுமதியளிக்கிறது.

பிரதமரால் ஜனாதிபதியாக செயற்பட முடியாத பட்சத்தில் ஒரு மாத காலத்திற்கு சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக செயற்படுவதற்கு அரசியல் யாப்பில் இடமுண்டு .

அந்த மாதத்திற்குள் வெளியேறும் ஜனாதிபதியின் எஞ்சிய பதவிக்காலத்திற்கு ஜனாதிபதியாக ஒருவரை நாடாளுமன்றம் தெரிவுசெய்ய வேண்டும். ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் அளிக்கப்பட்ட வாக்குகளில் 50இற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்யும் தினம் நிறைவு

நடப்பாண்டிற்கான வாக்காளர் இடாப்பில் வாக்காளர்கள் தம்மை பதிவுசெய்துகொள்வதற்கான இறுதித் தினம் இன்றுடன் (12) நிறைவடைவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்த வருடத்திற்காக வாக்காளர் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அவை பிரதேச செயலகங்களில் தற்சமயம் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

பெயர்ப்பட்டியலில் தமது பெயர் உள்ளனவா என வாக்காளர்கள் சரிபார்த்துக்கொள்ள முடியும். கடந்த வருடத்திற்கமைய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டுக்காள வாக்காளர் இடாப்பில் தம்மை பதிவுசெய்வதற்கான இறுதித் தினம் இன்றுடன் நிறைவடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏழாவது முறை விம்பிள்டன் சம்பியனானார் ஜோகோவிச்

கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் சம்பியன் மகுடத்துக்கான இறுதி ஆட்டத்தில் சேர்பியாவின் நடப்பு சம்பியன் நோவக் ஜோகோவிச் - அவுஸ்திரேலியாவின் நிக் கிர்ஜியோஸ் ஆகியோர் மோதினர்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 4-6, 6-3, 6-4, 7-6 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டம் வென்றார். இது விம்பிள்டன் தொடரில் ஜோகோவிச் வென்ற 7ஆவது சம்பியன் பட்டமாகும். ரொஜர் ஃபெடரர், பீட் சாம்ப்ராஸ், ஜோர்ன் போர்க் ஆகியோருடன் இணைந்து தொடர்ச்சியான நான்கு விம்பிள்டன் பட்டங்களை வென்ற வீரர்கள் வரிசையில் ஜோகோவிச் இணைந்தார்.

21 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற ஜோகோவிச், இரண்டாவது இடத்தில் இருக்கிறார். ரஃபேல் நடால் 22 பட்டங்களுடன் முதலிடம் பிடித்துள்ளார். ரொஜர் பெடரர் 20, பீட் சாம்ப்ராஸ் 14, ராய் எமர்சன் 12 பட்டங்களுடன் அடுத்த இடங்களில் உள்ளனர்.

அதிக விம்பிள்டன் பட்டங்களை வென்ற பட்டியலிலும் ஜோகோவிச் இரண்டாமிடத்தில் இருக்கிறார். ரோஜர் பெடரர் 8, நோவக் ஜோகோவிச் 7, பீட் சாம்ப்ராஸ் 7, வில்லியம் ரென்ஷா 7, பிஜோர்ன் போர்க் 5, லாரி டோஹெர்டி 5.



விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## இங்கிலாந்துடனான ரி20 தொடரைக் கைப்பற்றிய இந்தியா

### ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்

இந்திய அணியுடனான மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் இங்கிலாந்து அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றாலும், இந்திய அணி 2-1 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியது.

நோட்டிங்காமில் நேற்று முன்தினம் ஆரம்பமான போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 215 ஓட்டங்களை குவித்தது. அந்த அணியில் டேவிட் மலான் அதிரடியாக ஆடி 39 பந்துகளில் 77 ஓட்டங்களைக் குவித்தார்.




216 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, ஒரு கட்டத்தில் 31 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. அடுத்து இறங்கிய ஷ்ரேயஸ் அய்யர், சூர்யகுமார் யாதவுடன் ஜோடி சேர்ந்தார். அய்யர் நிதானமாக ஆட சூர்யகுமார் அதிரடியில் இறங்கினார். மைதானம் முழுவதும் பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக விளாசினார். ரி20 கிரிக்கெட்டில் சூர்யகுமார் யாதவ் 48 பந்துகளில் முதல் சதத்தைப் பதிவு செய்தார். அவர் 55 பந்துகளில் 117 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் இந்தியா 9 விக்கெட் இழப்புக்கு 198 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. எனினும், முதல் இரு போட்டிகளில் பெற்ற வெற்றியின் மூலம் இந்தியா 2-1 என்ற கணக்கில் தொடரை வென்றது. அடுத்த தொடரான 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் இன்று இலங்கை நேரப்படி பி.ப. 5.30 மணிக்கு த ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்பியனான றைசிங் ஸ்டார்




(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் - ஸ்டார் போய்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட ப்ரீமியர் லீக் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் றைசிங் ஸ்டார் அணி சம்பியனாகத் தெரிவானது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் சோறிங் சிக்சஸ் அணியுடன் றைசிங் ஸ்டார் அணி மோதியது. மீராகேணி அகமட் பரீட் விளையாட்டு மைதானத்தில் ஸ்டார் போய்ஸ் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் எம்.ஐ.எம்.மாஹிர் தலைமையில் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியில் வீரர்கள் மாஸ்டர் பிளாஸ்டர் மற்றும் பயர் ரொக்கட்ஸ் என நான்கு அணிகளாகப் பங்கேற்றனர்.

இறுதிநாள் நிகழ்வுகளில் ஏறாவூர் நகர சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.எம். றியாழ், ஐயங்கேணி ஹிஸ்புழ்ழாஹ் வித்தியாலய அதிபர் எச்.எம்.எம்.பஷீர், சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஜி.ஏ.நாஸர், பிரதேச சபை உறுப்பினர் என்.மோகன ராஜன், அகமட் பரீட் விளையாட்டுக்கழகத் தலைவர் எம்.எச்.றுமைஸ், ஸ்டார் போய்ஸ் விளையாட்டுக்கழகத்தின் செயலாளர் ஏ.எல்.ஏ.அஸீஸ் மற்றும் பொருளாளர் ஏ.எம்.பஸால் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரதேச சபை உறுப்பினரும், சமூக சேவையாளருமான மோகன ராஜன் விசேட தேவையுடைய மாணவர்களது பராமரிப்புச் செலவிற்காக ஒரு தொகை நிதியினை இதன்போது கையளித்தார்.

## அயர்லாந்துடன் ஒரு விக்கெட்டினால் த்ரில் வெற்றிபெற்ற நியூசிலாந்து




அயர்லாந்துக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி தலா 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் அயர்லாந்து அணியுடன் மோதுகிறது. முதல் தொடரான ஒருநாள் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி பந்துவீச்சை தெரிவுசெய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த அயர்லாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 300 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ஹாரி டெக்டர் 113 ஓட்டங்கள் குவித்தார். கர்டிஸ் கேம்பர் 43 ஓட்டங்களும், ஆண்ட் மெக்பிரைன் 39 ஓட்டங்களும் அடித்தனர். பின்னர் 301 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி களமிறங்கிவிளையாடிய நியூசிலாந்து அணியில் தொடக்க வீரர் மார்டின் குப்தில் 51 ஓட்டங்கள் எடுத்தார். க்ளென் பிலிப்ஸ் 38 ஓட்டங்கள் எடுத்தார்.

ஒரு பக்கம் விக்கெட் விழுந்த நிலையில், மறுபுறம் அதிரடி காட்டிய நியூசிலாந்து வீரர் மைக்கேல் பிரேஸ்வெல் 82 பந்துகளில் 127 ஓட்டங்கள் குவித்து கடைசிவரை களத்தில் இருந்தார். இறுதி ஓவரில் வெற்றிக்கு 20 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் நியூசிலாந்து அணி 49.5 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 305 ஓட்டங்கள் எடுத்து, ஒரு விக்கெட் வித்தியாசத்தில் த்ரில் வெற்றிபெற்றது. இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

## இலங்கைக்கு ஏழு ஆண்டுகளின் பின் ஆஸி.யுடன் டெஸ்ட் வெற்றி;

### முதல் முறையாக டெஸ்ட் தொடர் சமநிலையில் நிறைவு

பெட் கம்மின்ஸ் தலைமையிலான சுற்றுலா அவுஸ்திரேலிய அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்களினால் அபார வெற்றிபெற்று 7 ஆண்டுகளின் பின்னர் ஆஸி. அணியுடன் டெஸ்ட் வெற்றியை சுவைத்ததுடன், டெஸ்ட் தொடரையும் 1-1 என்ற அடிப்படையில் சமநிலை செய்தது.




முதல் டெஸ்ட் போட்டியில் ஆஸி. 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்ற நிலையில், இரண்டாவது போட்டி கடந்த வெள்ளிக்கிழமை காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸி. அணி முதலில் துடுப்பெடுத்தாடி தங்களது முதல் இன்னிங்ஸில், ஸ்ரீவ் ஸ்மித் மற்றும் மார்னஸ் லபுஷேன் ஆகியோரின் சதத்தின் உதவியுடன் 364 ஓட்டங்களை சேர்த்தது. தனது கன்னி டெஸ்ட் போட்டியில் விளையாடிய பிரபாத் ஜயசூரிய 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் ஆடிய இலங்கை அணி தினேஷ் சந்திமாலின் முறியடிக்கப்படாத இரட்டை சதத்தின் உதவியுடன் 554 ஓட்டங்களை குவித்தது. 190 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில், இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த ஆஸி. அணி, இலங்கை அணியின் சுழலில் வெறும் 151 ஓட்டங்களில் சுருண்டுபோனது. பிரபாத் ஜயசூரிய இரண்டாவது இன்னிங்ஸிலும் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி போட்டியில் மொத்தமாக 12 விக்கெட்டுகளை வீழ்த்தி, கன்னி டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கை வீரராக சாதனை படைத்தார். இலங்கை அணியின் இந்த வெற்றியின் மூலம் டெஸ்ட் தொடர் 1-1 என்ற அடிப்படையில் சமநிலையடைந்தது.

அந்தவகையில் இலங்கை – ஆஸி. அணிகளுக்கிடையிலான இருதரப்பு டெஸ்ட் தொடர் வரலாற்றில் முதல் முறையாக தொடர் சமநிலையில் நிறைவடைந்தது. மேலும் இலங்கை அணி முதல் முறையாக ஆஸி. அணியுடன் இன்னிங்ஸ் வெற்றியையும் சுவைத்தது. போட்டியின் ஆட்டநாயகனாக பிரபாத் ஜயசூரிய தெரிவான நிலையில், தொடர் ஆட்டநாயகனாக இரட்டை சதமடித்த தினேஷ் சந்திமால் தெரிவானர்.




அடுத்து எதிர்வரும் சனிக்கிழமை இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் காலியில் ஆரம்பமாகிறது.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

## கல்முனை ஸாஹிரா கல்லூரி சம்பியனாகத் தெரிவு



(நூருள் ஹுதா, எம்.எஸ்.எம். ஸாகிர்)

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்தில் கடந்த திங்கள், செவ்வாய் தினங்களில் நடைபெற்று முடிந்த பாடசாலைகளுக்கிடையிலான கல்முனை வலயமட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் 28 தங்கம், 21 வெள்ளி மற்றும் 7 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை மாகாண மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், வலயமட்ட மெய்வல்லுனர் போட்டியில் ஆண்களுக்கான 8 அஞ்சலோட்டப் போட்டிகளில் 5 முதலிடங்களையும், 2 இரண்டாமிடங்களையும் பெற்று அஞ்சலோட்டப் போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டதுடன், ஆண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிப் பிரிவில் 131 அதிகூடிய புள்ளிகளைப் பெற்று கல்முனை வலயமட்ட மெய்வல்லுனர் போட்டியில் ஆண்களுக்கான பிரிவில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7